A

SANGITHÁMṚTHA NIDHI

A FIRST BOOK ON SOUTH INDIAN MUSIC IN TAMIL

BY

Rai Sahib C. M. MADURANAYAKAM PILLAI
Author of
A "**Manual of Forestry**"
in Tamil and a
"**Manual for Forest Guards and Foresters**"
in Tamil, translated and published by
Government in all the South Indian Languages.

PRINTED BY
SRI RADHA KRISHNA PRESS
MADRAS.

1926

Registered Copy Right.

Price Rs. 1—8—0, exclusive of postage.

B

INTRODUCTION.

We have been asked to write an Introduction to "SANGITHAMRTHA NIDHI" and we do so with great pleasure. We have carefully examined the book, which shows sustained study and research, on the part of the author, of the literature available on South Indian Music. We find the whole subject, both Theory and Practice of Music, treated in a regular and systematic manner following the model of Science Text Books and written in simple and chaste Tamil. The origin of *Swaras*, *Ragas* and *Talas* and their importance in music have been explained in a commendably simple and lucid manner. Some Important rules of Music not generally known, such as *Vadhi* and *Anuvadhi Swaras*, the relative magnitude (vibration numbers) of the 12 Swaras in general use, the relation between the 72 *Malakartha* Ragas and 32 *Purvika* ragas have also been dealt with.

We wish further to invite particular attention to some of the valuable features in Part I of the book. They are:—

1. The exhibition in one sheet of the different attiributes of the 72 *Parent* Ragas (Page. 22);

2. The Appendix giving *Arohana* and *Avarohana Swaras* of a large number of *Jannya* ragas in use in Southern India, the ragas being arranged in alphabetical order for ready reference (pages 29 to 75);

3. The Index to the above mentioned Appendix (pages 78 to 86) ;

4. The section on *Alankara* in which all the 35 talas are illustrated (pages 132 to 144 Part II) ; and

5. The instruction regarding the use of the Harmonium and Violin, which is of utmost importance to teachers and students.

As regards Parts II and III which deal with the practice of Music, we have to obvserve that, as an introductory note to each *Githam, Varnam,* song etc., the author has givin the characteristics of the related *ragas* and *talas* so that from the beginning the correct practice of music may be noted and followed ; as experience shows that the correct practice is neglected by the majority of teachers of music of the present day.

We are of opinion that this book will not only be of great help to students but will also confer real benefit on teachers of music and enable them to inculcate the principles of music to the rising generation in a methodical style abandoning once for all the present empiric system. We feel no doubt that this instructive "First Book on South Indian Music," which supplies a real want, will be appreciated by all Tamilians.

P. G. KANDASWAMI, B.A., B.L.,
High Court Vakil.

MADRAS,
February 10, 1926.

D. N. SUNDER SINGH,
Sangita Vidwan.

C

PREFACE.

It will generally be conceded that the study of National Music should occupy a front place in the curriculum of all Schools; nor can it be denied that in Southern India, of which the author can speak with some knowledge, the art itself is gradually decaying from want of patronage. The very limited music world and the discerning public appear, however, now to have awakened to a sense of their reponsibility and are making efforts to revive the National Music by appealing to the authorities for assistance and encouragement.

With a fervent desire to contribute his bit to the revival, the author ventures to submit in Tamil, as a first Book on South Indian Music, this small treatise compiled from various sources and of these he wishes to make special mention of those two treasures of Indian Music in English, viz :—

(i) *The Music and Musical Instruments of South India and Deccan by Capt. C. R. Day dedicated to H. R. H. the Duke of Cannaught and Strathearn and*

(ii) *The Music of India by H. A. Popley, B. A.*

and the series of valuable books written in Telugu by the late Vidwans T. Singara Charyulu and *Brother*, like Swara Manjari, Gayakaparijatam, Sangitakala Nidhi and Gayakalochana, which are held in high estimation by all Telugu knowing lovers of Music.

The object kept in view is to induce a systematic and scientific study of South Indian Music not only by students but also by all lovers of music and for this reason the chief component parts of the science which are the *Swaras*, *Ragas* and *Talas* have been dealt with at length but in as simple and easy a manner as is consistent with their importance even at the risk of repetition, so that the mind of the beginner might be imbued with a correct knowledge of the basis on which music is founded.

The book is divided into three parts. Part I. treats of the theory of music with which every student of music should get himself acquainted, while the remaining two parts deal with the practice of music. Part 11. contains the usual time honoured *Saralis*, *Githams*, *Alankarams*, *Varnams*, etc. In Part III popular and easy songs set to music in *Chowka* and *Maddhya* kalas (time limits) are given. In both these parts before each song a brief note on the characteristics of the *concerned Ragas* and *Talas* is given, in order that, from the beginning the correct practice of the songs may be ensured and facilitated.

The book is not intended for and does not claim any pretention to the teaching of advanced music; and therefore, for senior students the author recommends *Sangitha Ratnavalli*, *Sangitha Rasarnavam* and other excellent works of Professer K. V. Srinivasa Iyengar, who has set to elegant music the songs of Thiyagaraja Swamigal and other great Saints and Masters of Music.

It is hoped that this book may be a useful help as much to to the rising generation of both sexes as to the present-day teachers of music both in homes and schools.

All suggestions for the improvement of the matter dealt with in the book will be very thankfully received.

AUTHOR.

MADRAS,
February 3, 1926.

கடவுள் துணை.

ச ங் கீ தா ம்ர் த நி தி

என்னும்

தமிழ் சங்கீத முதற்புத்தகம்.

இஃது
வனபரிபாலன நூல்,
சென்னை இராஜதானி பாரஸ்ட்டு இலாகா கீழ்தர உத்தியோகஸ்தர்
களின் உபயோகத்திற்காக
இந்த இராஜதானியில் வழங்கும் எல்லா பாஷைகளிலும்
கவரன்மென்டாரால் பிரசுரம் செய்யப்பட்ட
கார்ட், பாரஸ்டர்களின் மேனுயல்
என்னும் நூல்களின் ஆசிரியராகிய

ராய் சாஹிப் சி. எம். மதுரநாயகம் பிள்ளை
அவர்களால் இயற்றப்பட்டது.

சென்னைப்பட்டினம்
ஸ்ரீ ராதா கிருஷ்ண அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1926

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது)

விலை ரூபாய் 1-8-0 ; தபால் கட்டணம் பிரத்யேகம்.

முகவுரை.

சிறப்புற்றோங்கிய நம் தமிழ் நாட்டில், தெலுங்கு பாஷையில் சங்கீத ஞானம் பரவு படியாயும், லோகோபகாரமாயும், வித்வாம்சர்களான T. சிங்கார சார்யுலு அவர்களாலும், அவர் சகோதரராலும் இயற்றப்பட்ட ஸ்வரமஞ்சரி, காயகப்பாரீஜாதம், சங்கீதகலாநிதி, காயகலோசனு முதலிய அருமையான நூல்கள் பல இருப்பினும், தமிழில் எழுதப்பட்ட சங்கீத புஸ்தகங்கள் கொஞ்சமே இவைகளிலும் பெரும்பான்மையாய், வெளிப்படுத்தப் பட்டவைகள் :—

(i) மகிமை பொருந்திய சுவாமிகளாலும், தேர்ச்சியடைந்த வித்வ சிரோமணிகளாலும் அருளிச்செய்யப்பட்ட கீர்த்தனை, பண், ஜாவளி முதலிய பாட்டுகளும்,

(ii) அப்பாட்டுகளுக்கு அமைக்கப்பட்ட ஸ்வரங்களுமேயாம். இத்தகைய புத்தகங்கள் ஒரு பெரும்பொக்கிஷம் என்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. ஆகையினால் அவைகளை இயற்றிய நூலாசிரியர்களுக்கும், அவர்களில் சிரேஷ்டராய் விளங்குகிற கனம் - வித்வான் ஸ்ரீ K. V. சீனிவாசய்யங்கார் அவர்களுக்கும் நம்மனமார்ந்த நன்றியைச்செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

2. ஆனால் சங்கீதத்திற்குப் பிரதான அங்கங்களாகிய ஸ்வரம், ராகம், தாளம் இவைகளைப்பற்றியும், வாத்தியங்களை அப்பியசிக்கவேண்டிய முறைகளைப்பற்றியும், விவரமாயும், தெளிவாயும், விஷயங்களை விடாமல் தொகுப்பாயும், மாணவர்களுக்குச் சங்கீதஞானத்தை எளிதில் புகட்டக்கூடிய விதமாயும் எழுதப்பட்ட ஒரு நூல் தமிழ்ப்பாஷையில் இது வரையிலும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கவில்லை என்று நன்குணர்ந்த தேசாபிமானம் வகித்த எனது நண்பர்களில் சிலரும், என்சங்கீத உபாத்தியாயரும், தமிழ் நாட்டுச்சிறுவர்களும், சிறுமிகளும் சங்கீத ஞானத்தையும், அனுபவத்தையும் மயக்கமற எளிதில் கற்றுக்கொள்வதற்கு உதவியாகவும், கற்றுக்கொடுக்கிற உபாத்தியாயர்களுக்கு அனுகூலமாயிருக்கவும், தக்க நூல் ஒன்றை வெளிப்படுத்தல் அத்தியாவசியம் என்று எனக்கு நன்கு விளங்க வற்புறுத்திய படியாலும், ஆங்கிலம், தமிழ், தெலுங்கு என்று சொல்லப்படும் மூன்று பாஷைகளில் எழுதப்பட்டுள்ள அநேக நூல்களை ஆராய்ச்சிசெய்து இச்சிறு புத்தகத்தைப் பள்ளிக்கூடங்களில் சாஸ்திரபாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற முறையில், விஷயங்களை ஒழுங்கு படுத்தி எழுதி வெளிப்படுத்தத்துணிந்தேன். இதிலுள்ள குற்றம், குறைகளைக் கற்றறிந்த பெரியோர்கள் மன்னித்து அக்குறைகளை அறிவிக்க வேண்டுகின்றோம்.

3. இந்நூல் மூன்று பாகங்களாகப்பிரிக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பாகத்திலும் விஸ்தரிக்கப்பட்ட விஷயங்களின் விபரம் கனவான்கள்

இத்துடன் அனுபந்திக்கப்பட்ட பொருளட்டவணையைப் பரிசோதித்தால், நன்கு விளங்கும். முதல்பாகம் சங்கீதத்திற்கு ஆதார பூதமாயுள்ள ஸ்வரம், ராகம், தாளம் இவைகளைப்பற்றிய ஞானத்தைப்போதிக்கிறது. இரண்டாவது பாகத்தில் கீர்த்தனைகள் முதலிய பாட்டுகளைப் பாடுவதற்குமுன் அப்பியாசம் செய்யவேண்டிய சரளிவரிசைகள், ஜண்டைவரிசைகள், அலங்காரங்கள் கீதங்கள், தானவர்ணங்கள் முதலியவைகள் எழுதப்பட்டுள்ளன. மூன்றாவது பாகத்தில் கீர்த்தனங்கள், பண்கள் திருப்புகழ், ஜாவளி முதலிய தமிழ்நாட்டில் வழங்கும் பாட்டுகள், ஸ்வரங்களுடன் வரையப்பட்டுள்ளன. பாட்டுகளை ஸ்வரப்படுத்துவதில் ஆவர்த்தத்தின் விபாக அங்கங்கள் ஒவ்வொன்றும் 4 குறில்கள் அல்லது ஒரு மாத்திரை கால அளவிலில்லாமல் சவுக்ககாலத்திலும், மத்திம காலத்திலும் அதாவது $\frac{1}{4}$அல்லது $\frac{1}{2}$மாத்திரைக் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குக்காரணம் இது முதற்புத்தகமாகையினால் மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே அதிக கஷ்டத்தைக் கொடுக்கக்கூடாதென்பதே. இதில் பயிற்சி அடைந்தால் திரிகாலப்பாட்டுகளை அப்பியாசம் செய்வதற்கும் பாட்டுகளை விஸ்தரித்துப் பாடுவதற்கும் அனுகூலமாயிருக்கும். இன்னும், மாணவர்கள் ஆரம்பத்திலேயே ஸ்வரங்களிலும், ராகங்களிலும், தாளங்களிலும் பிசகுசெய்யாமல், வாத்தியத்தில் பாட்டுகளைஒழுங்காய் அப்பியாசம் செய்ய, ஒவ்வொருகீதம், வர்ணம், கீர்த்தனைக்கும் அதனதன் தலைப்பில், சம்பந்தப்பட்ட ராக, தாள லட்சணங்கள் விவரித்து வரையப்பட்டிருக்கின்றன. சுருங்கச் சொல்லில் இந்தப் புத்தகம் தமிழில் சங்கீத முதற்புத்தகமாக அமையவேண்டுமென்றே ஆதிமுதல் அந்தம் வரையிலும் கவனித்துவரையப்பட்டிருக்கிறது.

இந்தப்புத்தகத்தை அச்சிட்டுவெளிப்படுத்த கர்த்தர்களாயிருந்த, தேசாபிமானம் வகித்த என் நண்பர்களுக்குப் பொதுவாகவும், இந்நூலை அடியேன் இயற்ற தூண்டுகோலாயிருந்ததும் தவிர, மூன்றாவது பாகத்திலுள்ள பாட்டுகளை வேண்டியபடி ஸ்வரப்படுத்தி உதவிசெய்த என் சங்கீத உபாத்தியாயரும், நேசருமாகிய ஸ்ரீமான் தஞ்சை. சோமு ராவ் அவர்களுக்குக் குறிப்பாகவும் என் வந்தனத்தை உள்ளன்புடன் செலுத்துகிறேன்.

இது தவிர, இப்புத்தகத்தின் கடைசி அச்சுப்பிரதிகளை ஊக்கத்துடன் பரிசோதனைசெய்த சிந்தாதிரிப்பேட்டை உயர்தரப் பள்ளிக்கூடத்துப் பிரதம தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் சின்னப்பா பிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச்செலுத்துகிறேன்.

இங்ஙனம்.

சி. எம். மதுரநாயகம்.

பொருளட்டவணை.

				பக்கம்.
முன்னுரை (இங்கிலீஷ்)	...	...	...	iii
முகவுரை (இங்கிலீஷ்)	...	...	...	v
முகவுரை (தமிழ்)	...	...	...	ix
ஆனய நாயனர் புராணம் ..	...	...	...	xix
பிழைத்திருத்தம்	..	...	...	xx

பாகம் I.

சங்கீத சாஸ்திரஞானம்.

அத்தியாயம் I.

பதங்களின் அர்த்தம் 1

அத்தியாயம் II.

ஸ்வரங்கள்.

பிரிவு I.—சப்தஸ்வரங்கள்

விஷயம் 1.	ஸ்வரங்களின் பெயரும், தொனியும், சாயலும் ...	2
,, 2.	ஸ்வரத்தின் உற்பத்தி	2
,, 3.	சப்தஸ்வரங்களின் வகுப்பு	2
,, 4.	தற்கால வழக்கத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் ...	3
,, 5.	பூர்வீக ஸ்வரஸ்தானங்கள்	4
,, 6.	தற்காலத்திய மொத்த ஸ்வரஸ்தானங்களின் சங்கை ...	4
,, 7.	சதுச்ருதி, ஷட்ச்ருதி ரிஷப, தைவம் என்னும் பெயர்களுக்குக் காரணம்	5
,, 8.	ஸ்தாயிகள்	5

பிரிவு II.—ஆர்மோனியம்.

விஷயம் 1.	ஆர்மோனியத்தின் ஸ்தாயிகள்	6
,, 2.	ஸ்தாயிகளிலுள்ள ஸ்வரஸ்தானங்கள்	6
,, 3.	ஸ்வரஸ்தானங்களின் அதிகாரம் முதலியன ...	9

பக்கம்.

விஷயம் 4. ஆதாரஸ்வரம் 9
,, 5. வழக்கத்திலுபயோகிக்கப்படும் ஸ்தாயிகள் ... 10
,, 6. வாசிக்கும் வழி 10

பிரிவு III.—Violin என்கிற பிட்டில்.

விஷயம் 1. பிட்டிலின் அமைப்பு 11
,, 2. பிட்டிலின் ஸ்தாயிகளும், ஸ்வரஸ்தானங்களும் ... 11
,, 3. பிட்டிலின் ஆதாரஸ்வரங்கள் 14
,, 4. வழக்கத்திலுபயோகமாகும் தந்திகளினுடைய பாகங்கள் 15
,, 5. பிட்டில் படத்திலுள்ள இலக்கங்களின் கருத்து ... 15
,, 6. பிட்டிலை வாசிக்கும் வழி 15

பிரிவு VI.—கமகங்கள் முதலியன

விஷயம் 1. கமகங்கள் 17
,, 2. வாதி, சம்வாதி, அனுவாதி ஸ்வரங்கள்... ... 18
,, தீவிர, கோமள ஸ்வரங்கள் 19

அத்தியாயம் III.

ராகங்கள்.

விஷயம் 1. பதத்தின் அர்த்தம் 20
,, 2. மேளகர்த்தா ராகங்களின் வகுப்புகள் 20
,, 3. மேளகர்த்தா ராகப்பதக்கம் 22
,, 4. ஜன்ய ராகங்களின் உற்பத்தி 24
,, 5. வற்சித ராகங்களின் லட்சணம் 25
,, 6. வற்சித ராகங்களின் சங்கை 26
,, 7. வக்கிர ராகங்கள் 27
,, 8. கலப்பு ராகங்கள் 28
,, 9. ஜன்ய ராக அனுபந்தம் 29
,, 10. ராக அகராதி அனுபந்தம்... 77
,, 11. சிலபிரதான ராகங்களின் கோமள, தீவிர ஸ்வரங்கள்... 87
,, 12. பிரதான மேளகர்த்தா ராகங்கள் 87
,, 13. சிலபிரதான ராகங்களின் லட்சணங்கள் ... 89
,, 14. பாடுவதற்கு உசிதமான காலம் 92
,, 15. 32 பூர்வீக ராகங்கள் 94
,, 16. பூர்வீக ராகங்களைச் செய்யுளுக்குப் பிரயோகம் செய்யும் முறை 95
,, 17. அதிபூர்வ பண் ராகங்கள்... 95
,, 18. ராகங்களின் பண்டைகாலத்திய பெருமை ... 96
,, 19. ஆலாபம் 96

அத்தியாயம் IV.

தாளம்.

பிரிவு I.—தாளஞானம். பக்கம்.

விஷயம் 1. தாளம் என்னும் பதத்தின் அர்த்தம் 97
,, 2. மாத்திரையின் கால அளவு 97
,, 3. விளம்பித, தீவிரகால மாத்திரைக்கணக்கு ... 98
,, 4. பாட்டு 98
,, 5. ஆவர்த்தம் 99
,, 6. விபாகம் 100
,, 7. அங்கம் 100
,, 8. அங்க அக்ஷரங்கள் 101
,, 9. அங்கங்களின் மாத்திரைக்கணக்கு 102
,, 10. தாளம் போடப்படும் மூன்று விதங்கள் 103
,, 11. தாள மாத்திரைகாலம் 103

பிரிவு II—35 தாளப்பிரிவுகள் 104

விஷயம் 1. ஆதாரதாளங்கள் 104
,, 2. தாள ஜாதிகள் 105
,, 3. தாள விபாகங்களை எண்ணும் விதம் 105
,, 4. தாளங்களில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள்... 106
,, 5. தாளக்கிரமம் 107
,, 6. விஸ்மயகாலம் 107
,, 7. தாளப்பதக்கம் 108
,, 8. அதிகபழக்கத்திலுள்ள 7 தாளங்கள் 109
,, 9. 7 தாளங்களின் விபாக அடையாளங்களும், உதாரணங்களும் 110

பிரிவு III.—35 தாளங்களில் சேராத தாளங்கள்.

விஷயம் 1. சாப்புதாளம்... 111
,, 2. லகுதாளம் 111

பாகம் II.

சங்கீத அப்பியாசம்.

அத்தியாயம் I.

சரளி, ஜண்டைவரிசைகள், கீதங்கள், வர்ணங்கள் முதலியன.

பிரிவு I.—சரளிவரிசைகள்.

விஷயம் 1 மாணவர்களின் ஒழுங்கு 113
,, 2. சரளிவரிசைகளின் லட்சணம் 114

,, 3. ஸ்வர புஷ்டிப் பரிமாணமும், மாத்திரைக் கால அனுபவமும் 115
,, 4. ஸ்வரபுஷ்டிப் பரிமாணம் 115
,, 5. ஸ்வரங்களின் நாதப் பிரமாண ஜாப்தா 117
,, 6. மாத்திரை கால அனுபவ ஞானம் 119
,, 7. அடையாளங்களும், அவைகளின் அர்த்தமும் ... 119
,, 8. ஸ்வரக்கியான, மாத்திரைகால அப்பியாச பாடம் ... 121
,, 9. முதல் பாடத்தை ஆர்மோனியத்தில் வாசிக்கும் விதம்... 122
,, 10. முதல் பாடத்தை பிட்டிலில் வாசிக்கும் விதம் ... 123
,, 11. சரளி வரிசைகள் 124
(i) முதல் சரளி வரிசை 125
(ii) மற்ற சரளி வரிசைகள் 126
(iii) மேல் ஸ்தாயி வரிசைகள் 127

பிரிவு II.—ஜண்டவரிசைகள் 128

பிரிவு III.—தாட்டு வரிசைகள் 131

பிரிவு IV.—அலங்காரங்கள்.

விஷயம் 1. த்ருவதாளம் 5 ஜாதிகள் 132
,, 2. மட்டியதாளம் ,, ... 134
,, 3. ரூபக தாளம் ,, ... 136
,, 4. ஜம்பை தாளம் ,, ... 138
,, 5. திருபுடை தாளம் ,, ... 139
,, 6. அட தாளம் ,, ... 141
,, 7. ஏக தாளம் ,, ... 143

அத்தியாயம் II.

கீதங்கள். 145

பிரிவு I—கணேச கீதங்கள்.

1. ஸ்ரீ கணநாதா ரா - மலகரி ; தா - ச. ரூபகம் ... 146
2. கெரயநீனு ,, ,, தா - தி. திருபுடை ... 148

பிரிவு II.—இதரகீதங்கள்.

1. பதுமநாபா ; ரா - மலகரி ; தா. தி. திருபுடை ... 149
2. ஆனலேகரா ; ,, சுத்தசாவேரி ; ,, ,, ... 150
3. மந்தரதாரே ; ,, காம்போதி ; ,, ஆதி ... 151
4. ரேரேஸ்ரீராமா ; ,, ஆரபி ; ,, தி. திருபுடை 152
5. மீனாக்ஷிஜய ; ,, ஸ்ரீராகம் ; ,, ச. த்ருவம் ... 154
6. ஸ்ரீதா ஸ்ரீரகுபதே ; ,, சங்காபரணம் ,, ச. மட்டியம்.. 156
7. ரேரேதசரதராஜா ; ,, தோடி ; ,, ச. த்ருவம் ... 158

H

8. ஸ்ரீராமசந்த்ர ஸ்ரீ ; ,, பயிரவி ; ,, ச. த்ருவம் ... 160
9. கமலஜதள ; ,, கல்யாணி ; ,, தி. திருபுடை 162
10. கமலசுலோசன ; ,, ஆனந்தபயிரவி ; ,, ஆதி ... 163
11. வரவீணா ; ,, மோகனம்; ,, ச. ரூபகம் ... 164

அத்தியாயம் III.

ஸ்வரஜதிகள்.

1. சா, ரி காபா ; ,, பிலகரி ; ,, ஆதி ... 166

அத்தியாயம் IV.

தானவர்ணங்கள். ... 167

1. சாமிநின்னேகோரி ; ராகம் - சங்கராபரணம் ; தாளம் - ஆதி 168
2. ஜலஜாக்ஷா ; ,, அம்ஸத்துவனி ; ,, ,, ... 170
3. தருணிநின்னு ; ,, காம்போதி ; ,, ,, ... 172
4. ஏராநாபை ; ,, தோடி ; ,, ,, ... 176
5. வனஜாக்ஷரோ ; ,, கல்யாணி ; ,, ,, ... 176
6. வலசி வச்சியுன்ன ; ,, நவராக மாலிகை ; ,, ,, ... 178
7. விரிபொணி ; ,, பயிரவி ; ,, கண்டஅடம் 182

பாகம் III.

பாட்டுகள்.

குறிப்பு 185

அத்தியாயம் I.

தியாக ராஜ சுவாமிகளின் கீர்த்தனங்கள்.

1. கிரி ராஜ சுதா ; ராகம் - பங்காள ; தாளம் - ஆதி ... 186
2. ஆனந்தசாகரமே ; ,, கருடத்துவனி ; ,, ,, ... 188
3. புவினிதாசுடனே ; ,, ஸ்ரீரஞ்சனி ; ,, ,, ... 190
4. எம்தராநீதன ; ,, அரிகாம்போதி ; ,, ,, ... 192
5. எந்தவேடுகொந்து ,, சரஸ்வதிமனோகரி ; ,, ,, ... 194
6. சுஜன ஜீவன ; ,, கமாச் ; ,, ச. ரூபகம் ... 196
7. கன்னதண்ட்ரி ; ,, தேவமனோகரி ; ,, ஆதி ... 198
8. தொலினேஜே சின ,, சுத்தபங்காள ; ,, ,, ... 200
9. விடமுசேய ; ,, காஹரப்பிரிய ; ,, ,, ... 202
10. ஸ்ரீரகுகுலமந்து ; ,, அம்ஸத்துவனி ; ,, ,, ... 204

அத்தியாயம் II.

தீக்ஷதர், சாமா சாஸ்திரிகள் முதலிய பாகவதர்களின் கீர்த்தனைகள்.

1.	வாதபிகணபதி ;	ராகம். அம்ஸத்துவனி ;	தாளம். ஆதி	...	205
2.	சரோஜதள ;	,, சங்கராபரணம் ;	,, ,,	...	208
3.	இகனைனநா ;	,, புஸ்பலதிகா ;	,, ,,	...	210
4.	சம்போசிவகணபதி	,, ஆனந்தபயிரவி ;	,, ,,	...	212
5.	சிதம்பரதரிசன ;	,, முகாரி ;	,, ,,	...	214
6.	வேதப்பழாசமே ;	,, அம்ஸத்துவனி ;	,, ,,	...	216
7.	அருமருந்தொரு ;	,, மோகனம் ;	,, ச - ரூபகம்	...	214
8.	தில்லைக்கனக ,	,, அரிகாம் போதி ;	,, ,,	...	217
9.	வராய் ஸ்ரீமுரு ;	,, ஸ்ரீராகம் ;	,, ஆதி	...	220
10.	நெஞ்சமேஅஞ்சாதே ;	ராகம் - காபி ;	தாளம். கண்டஏகம்	...	221
11.	தேவிமீனாக்ஷி ;	,, கல்யாணி ;	,, ச - ரூபகம்	...	222

அத்தியாயம் III.

தேவாரங்கள்.

1.	நீளநினைந்தடி ;	ராகம் - கமாச் ;	தாளம் - ச - ரூபகம்	223
2	மாதர்ப்பிறைக்கண்ணி ;	,, தேவகாந்தாரி ;	,, ஆதி	226
3.	தோடுடைய ;	,, கமபீரநாட ;	,, ,,	227
4.	வேதமோதி ;	,, பிலகரி ;	,, ,,	228
5.	வாசிதீரவே ;	,, பூர்விகல்யாணி ;	,, ,,	228
6.	வடிவுடைமழு ;	,, ஆரபி ;	,, ,,	229

அத்தியாயம் IV.

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ்.

1.	ஏறுமயிலேறி ; ராகம்	{ மோகனம் / அனந்த பயிரவி	தாளம் - மி - ஜம்பை	230
2.	சரணகமலா ; ,,	ஜஞ்ஜூடி ;	,, ,,	231
3.	நீலமயில்சேரு ; ,,	கமாச் ;	,, ,,	232
4.	நாதவிந்துகலா ; ,,	சங்கராபாணம் ;	,, ஆதி	234
5.	திருமகளுலாவு; ,,	கமாச் ;	,, ,,	235
6.	திமிரவுததி ; ,,	ஆனந்த பயிரவி ;	,, தி - சாபு	236
7.	மருவே செரித்த ,,	காஹரப்பிரிய ;	,, ஆதி	237
8,	அதல சேடனாராட ;	ஆரபி ;	,, தி - த்ருவம்	238

அத்தியாயம் V.

திருவருட்பா, சிவவாக்கியர், ஜாவளி, வாழ்த்துமுதலியன.

1.	பூமாந்தும் ;	ராகம் - சங்கராபரணம் ;	தாளம் - ஆதி	239
2.	மாற்றறியாத ;	,, சாடி ;	,, ,,	240
3.	இருக்குநாலு ;	,, ஜஞ்ஜூடி ;	,, ரூபக்ம்	241
4.	மஞ்சுநிகர் ;	,, வுசேனி ;	,, ,,	242
5.	பொன்னுலவு ;	,, வுசேனி ;	,, சாப்பு	243
6.	புள்ளிக்கலாப ;	,, உசேனி ;	,, ஆதி	244
7.	மரியாதநெலியக ;	,, சுருட்டி ;	,, ரூபகம்	245
8.	நீநாமரூபமுலகு ;	,, சௌராஷ்டிரம் ;	,, ஆதி	246
9.	சிவதேவாதி ;	,, காம்போதி ;	,, ச—ஏகம்	247
10.	வாழ்க வந்தணர்	,, மங்கள கௌசிகம்	,, ,, ,,	248

பிழைத்திருத்தம்

பக்கம்	தலைப்பி லிருந்து வரி	அடியி லிருந்து வரி	இதன் கீழிருப்பதற்குப் பதிலாக	இதன் கீழிருப்பதை வைத்து வாசிக்கவும்
2	—	7	அடையப்பட்டும்	அடையப்படும்
3	6	—	நான்கு.	நான்கு
5	—	11	ப்ராக்ருதி	ப்ர்க்ருதி
10	—	2	அமைந்தது	அமைந்தது ;
24	2	—	பகங்களில்	பக்கங்களில்
,,	—	9	வர்ச்சிதமாய்	வற்சிதமாய்
34	—	3	கல்காட	கலகட
,,	—	1	கால கண்டி	கலகம்டி
38	1	தலைப்பு	ப—தநி—ச்	பத——நிச்

☞ தொடர்ச்சிக்கு 20-வது பக்கம் பார்க்கவும்.

ஆனாய நாயனார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விருத்தம் ; ராகம் - நாட்டை.

மங்கலமா மழைநாட்டு மங்கலமா நகருண்
மருவுபுக ழானயர் வளரா மேய்ப்பார்
கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து
குழலிசையி னைந்தெழுத்துங் குழைய வைத்து
தங்குசரா சரங்களெல்லா முருகா நிற்ப
தம்பிரா னணைந்துசெவி தாழ்ந்து வாழ்ந்து
பொங்கியவான் கருணைபுரிந்தென் றமூதப்
பொதுகவென் றருளவுடன் போயி னாரே.

இதன் பொருள்.

திருமகளார் வாசம்செய்யப்பெற்ற மழைநாட்டில், **மங்கலம்** என்னும் சிறப்புற்றோங்கிய நகரத்தில் வசித்துக்கொண்டிருந்து கீர்த்தி பொருந்திய **ஆனயர்** என்பவர் ஒரு சுபதினத்தில் தம்முடைய பசுநிரைகளை மேய்க்கும் இடையர்களுடன், யாலையைப்போன்ற நீண்ட பூங்கொத்துகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் பரமசிவத்திற்குப் பிரீதியான கொன்றை விருக்ஷத்தின் சமீபத்திற் சென்று, அன்பின் மிகுதியால், சங்கீதநூலில் விதித்த விதமாய்ச் சப்த ஸ்வரங்களுடன் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைத் தன்வேய்ங்குழலினல் வாசிக்க, பூமியின்கண்ணுள்ள சரம், அசரம் என்னும் ஆன்மவர்க்கங்களெல்லாம் தம்மைச்சூழ்ந்து, இன்னிசையின் மதுரத்தில் வசப்பட்டுத் தங்களை மறந்து நிற்க, எல்லாம் வல்ல இறைவன் ஆனயரைச்சமீபித்து தம்திருசெவிகளாலும் இன்னிசையையுண்டு, சமுத்திரம்போல் ஆழ்ந்த தமது கிருபையால் அவரைக் கடாட்சித்து இவ்விதமாகவே நீர் எப்பொழுதும் குழலூதிக் கொண்டு ஆனந்தமயமா யிருக்கக்கடவது என்று அருள்செய்ய, நாயனர் எம்பெருமானுடன் கூடவே கயிலைக்குச்சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

<table>
<tr><th>பக்கம்</th><th>தலைப்பிலிருந்து வரி</th><th>அடியிலிருந்து வரி</th><th>இதன் கீழிருப்பதற்குப் பதிலாக</th><th>இதன் கீழிருப்பதை வைத்து வாசிக்கவும்</th></tr>
<tr><td>53</td><td>—</td><td>1</td><td>சநித சரீகமபதநி</td><td>சநித சரீகமபதநி</td></tr>
<tr><td>75</td><td>—</td><td>1</td><td>ரகிகப்பிரிய</td><td>ரசிகப்பிரிய</td></tr>
<tr><td>78</td><td>16</td><td>—</td><td>55 சல்கரட</td><td>55 கலகட</td></tr>
<tr><td>78</td><td>11</td><td>—</td><td>82 காலகண்டி</td><td>82 கலகம்டி</td></tr>
<tr><td>86</td><td>—</td><td>4</td><td>356</td><td>456</td></tr>
<tr><td>87</td><td>—</td><td>11</td><td>ஸன்ய</td><td>ஜன்ய</td></tr>
<tr><td>88</td><td>2</td><td>—</td><td>முந்தின</td><td>அடுத்த விதிக்கப்பட்ட</td></tr>
<tr><td>103</td><td>—</td><td>5</td><td>அங்கம்</td><td>அங்கம்.</td></tr>
<tr><td>107</td><td>—</td><td>10</td><td>இதைததான்</td><td>இதைத்தான்</td></tr>
<tr><td>107</td><td>—</td><td>6</td><td>ஷயம்-7</td><td>விஷயம்-7</td></tr>
<tr><td>109</td><td>6</td><td>—</td><td>5 | 2 | 5 | 5 |</td><td>5 | 2 | 5 | 5 ‖</td></tr>
<tr><td>111</td><td>1</td><td>—</td><td>பிரிவு IV</td><td>பிரிவு III</td></tr>
<tr><td>115</td><td>14</td><td>—</td><td>சம்பநதத்தைபம்</td><td>சம்பந்தத்தையும்</td></tr>
<tr><td>122</td><td>3</td><td>—</td><td>ரன்கு</td><td>நான்கு</td></tr>
<tr><td>123</td><td>7</td><td>—</td><td>மாத திரம்</td><td>மாத்திரம்</td></tr>
<tr><td>123</td><td>13</td><td>—</td><td>நிதாஞமாய்</td><td>நிதானமாய்</td></tr>
<tr><td>123</td><td>—</td><td>6</td><td>போகடு</td><td>போட்டு</td></tr>
<tr><td>123</td><td>—</td><td>5</td><td>வாசிடக்</td><td>வாசிக்க</td></tr>
<tr><td>136</td><td>10</td><td>—</td><td>+|23 ‖ = ‖ | +|23 ‖</td><td>±23 ‖ = ‖ | ±23 ‖</td></tr>
<tr><td>146</td><td>7</td><td>—</td><td>சரடவ</td><td>சாடவ</td></tr>
<tr><td>149</td><td>6</td><td>—</td><td>± ± 23</td><td>± 23</td></tr>
<tr><td>150</td><td colspan="2">தாளம்போடும்விதம்</td><td>= =</td><td>= ‖</td></tr>
<tr><td>151</td><td colspan="2">ஸ்வரங்களின் கடைசியில்</td><td>—</td><td>‖ இரட்டை குருக்குக் கோடுகள் போடவும்</td></tr>
<tr><td>153</td><td colspan="2">தாளம்போடும்விதம்</td><td>‖ =</td><td>= ‖</td></tr>
<tr><td>154</td><td>—</td><td>5</td><td>± 334</td><td>± 234</td></tr>
<tr><td>162</td><td colspan="2">தாளம்போடும்விதம்</td><td>± 23 | ± = |</td><td>± 23 | = ‖ |</td></tr>
<tr><td>172</td><td>1</td><td>—</td><td>IV</td><td>III</td></tr>
<tr><td>174</td><td>1</td><td>—</td><td>III</td><td>VI</td></tr>
<tr><td>190</td><td>—</td><td>1</td><td>மத + ரீ</td><td>மக + ரீ</td></tr>
<tr><td>210</td><td>3</td><td>—</td><td>இம்கனென</td><td>இகனென</td></tr>
<tr><td>211</td><td>2, 7</td><td>1, 10</td><td>இம்கனென</td><td>இகனென</td></tr>
<tr><td>238</td><td colspan="2">தாளம்போடும்விதம்</td><td>± = ‖ | ± = ‖ | = ‖ | ± = ‖</td><td>± 23 | ± 23 | = ‖ | ± 23 ‖</td></tr>
</table>

உ

கடவுள் துணை.

சங்கீதாம்ர்த நிதி.

பாகம் 1

சங்கீத சாஸ்திர ஞானம்.

அத்தியாயம் 1.

பதங்களின் அர்த்தம்.

சங்கீதம் என்றால் இசைக் கருவிகளாகிய வாத்தியத் துடன் பாடப்படும் கீதம்.

கீதம் என்றால் சப்த ஸ்வரங்களை இசையுடன் தழுவிய பாட்டு.

வாத்தியம்-இது ஸ்வரக்கருவிகள், தாளக்கருவிகள் என்று இரு வகைப்படும்.

(i) ஸ்வரக்கருவிகள் துளைகளையுடைய நாகஸ்வரம், புல்லாங்குழல், ஆர்மோனியம் முதலிய கருவிகளும்; நரம்பு அல்லது தந்திகளையுடைய வீணை, சித்தார், தம்பூர், பிட்டில் முதலிய கருவிகளுமாம்.

(ii) தாளக்கருவிகள் உலோகங்களினாற்செய்யப்பட்ட கைத்தாளங்கள், மத்தளம், தவல், உடுக்கை இவைகளைப்போன்றனவைகளுமாம்.

ஸ்வரம் என்பது ஒரு தனி நாதம் அல்லது தனி சப்தம் என்று பொருள்படும்.

அத்தியாயம் II

ஸ்வரங்கள்.

பிரிவு I.

சப்த ஸ்வரங்கள்

விஷயம்-1. ஸ்வரங்களின் பெயரும், தொனியின் சாயலும்.

ஸ்வரங்கள் ஏழு. இவைகள் சப்த ஸ்வரங்களென்று சொல்லப்படும். இவைகளின் பெயரும், சப்தத்தின் சாயலும் இதன் கீழ் வரையப்பட்டிருக்கின்றன.

சங்கை	சப்தம்	பெயர்	சப்தத்தின் சாயல்
1	ச	ஷட்ஜமம்	மயிலின்தொனி
2	ரி	ரிஷபம்	காளைமாட்டின் தொனி
3	க	காந்தாரம்	ஆட்டின் தொனி
4	ம	மத்யமம்	கொக்கின் தொனி
5	ப	பஞ்சமம்	கோகிலபட்சியின்தொனி
6	த	தைவதம்	குதிரையின் தொனி
7	நி	நிஷாதம்	யானையின்தொனி

விஷயம் 2. ஸ்வரத்தின் உற்பத்தி.

நம்முடைய சரீரத்தில் அடங்கிய நாசி, கண்டம், சிரசு, தவடை நாக்கு, தந்தம் ஆகியஇந்த ஆறு உறுப்புகளின் உதவியால் நாதம் உண்டாகிறது. இதில் குறைந்த நாதம் ச (சட்ஜமம்) என்னும் ஸ்வரம். இந்த நாதத்தை முறையாக உயர்த்திக்கொண்டுபோனால் ரி, க, ம, ப, த, நி, என்கிற உயர்ந்த ஸ்வரங்கள் உற்பத்தியாகும். நி, க்கு மேல் எச்சு ச் உற்பத்தியாகும். இந்த எச்சு ச் லிருந்து முறையே குறைத்துக்கொண்டுபோனால் நி, த, ப, ம, க, ரி, என்கிற குறைந்த ஸ்வரங்களும், ச என்று ஆரம்பித்த ஆதாரஸ்வரமும் அடையப்படும்

ஸ்வரங்கள் ச, ரி, க, ம, ப, த, நி, என்று ஏழாயிருந்தாலும் மேலே சொல்லப்பட்ட எச்சு ச் வையும் சேர்த்து ச, ரி, க, ம, ப, த, நி, ச், என்று பாடுவது தொன்று தொட்ட வழக்கம்.

விஷயம்-3, சப்த ஸ்வரங்களின் வகுப்பு.

மேற்சொன்ன ஏழு ஸ்வரங்களும் தற்காலத்தில் பிர்க்ருதி, விக்ருதி என்று இரண்டு பிரிவாயிருக்கின்றன. பிர்க்ருதி ஸ்வரம் என்றால்

வகுப்பை அல்லது பேதத்தையடையாத ஸ்வரம். ச (ஷட்ஜமம்) ப (பஞ்சமம்) இவைகளிரண்டும் பிர்க்ருதி ஸ்வரங்கள்.

விக்ருதி ஸ்வரமென்றால் வகுப்புகளையுடைய ஸ்வரம். ரி, க, ம, த, நி, இவைகள் ஐந்தும் விக்ருதிஸ்வரங்கள். இந்த ஐந்தில் ம (மத்திமம்), சுத்த மத்திமம் (சு-ம), பிரதி மத்திமம் (பி-ம) என்று இரண்டு வகுப்புகளை யுடையது. மீதியான ரி, க, த, நி, என்கிற நான்கு ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று வகுப்புகளையுடையன. அவை யாவன;—

ரி	த
1. சு-ரி (சுத்திரிஷபம்)	1. சு-த (சுத்ததைவதம்)
2. ச-ரி (சதுஸ்ருதிரிஷபம்)	2. ச-த (சதுஸ் ருதிதைவதம்)
3. ஷ-ரி (ஷட்சுருதிரிஷபம்)	3. ஷ-த (ஷட்சுருதிதைவதம்)
க	**நி**
1. சு-க (சுத்த காந்தாரம்)	1. சு-நி (சுத்த நிஷாதம்)
2. சா-க (சாதாரண காந்தாரம்)	2. கை-நி (கைசிக நிஷாதம்)
3. அ-க (அந்தர காந்தாரம்)	3. கா-நி (காகலி நிஷதாம்)

சுத்த ரிஷபத்தைவிட சதுஸ்ருதிரிஷபம் ஜாஸ்தியான தொனியையுடையது. சதுஸ்ருதிரிஷபத்தைவிட ஷட்சுருதிரிஷபம் உயர்ந்த தொனியையுடையது. இவ்விதமாகவே க, த, நி, என்கிற ஸ்வரங்களும் முறையே அடுத்த க, த, நி, ஸ்வர வகுப்புகளைவிட மேலான தொனிகளையுடையன.

விஷயம் 4. தற்காலவழக்கத்தில்வரும் ஸ்வர ஸ்தானங்கள்.

சப்த ஸ்வரங்களும் அவைகளின் வகுப்புகளும் எண்ணிக்கையில் பதினாறு ஆகும். அவையாவன:—

(1) ச (2) சு-ரி (3) ச-ரி (4) ஷ-ரி (5) சு-க (6) சா-க (7) அ-க (8) சு-ம (9) பி-ம (10) ப (11) சு-த (12) ச-த (13) ஷ-த (14) சு-நி (15) கை-நி (16) கா-நி.

இவ்விதமாக 16 ஸ்வரங்களிருந்தாலும் இவைகளுக்குத் தற்கால வாத்தியங்களில் ஸ்தானங்கள் 12 தானிருக்கின்றன,

ஏனென்றால் ச-ரி யுக்கும் சு-க வுக்கும் ஸ்தானம் ஒன்றே,
ஷ-ரி ,, சா-க ,, ,,

ச-த வுக்கும் சு-நி யுக்கும் ஸ்தானம் ஒன்றே
ஷ-த ,, கை-நி ,, ,,

ஆகையினால் 16 ல் 4 போக 12 ஸ்வரஸ்தானங்கள் சாதாரண உபயோகத்திலிருக்கின்றன. அவையாவன:—

1. ச (பிர்க்ருதி)
2. சு-ரி
3. ச-ரி யும், சு-க வு-ம்
4. ஷ-ரி ,, சா-க ,,
5. அ-க
6. சு-ம
7. பி-ம
8. ப (பிர்க்ருதி)
9. சு-த
10. ச-த வும், சு-நி யும்
11. ஷ-த ,, கை-நி யும்
12. கா-நி

விஷயம் 5 பூர்வீக ஸ்வரஸ்தானங்கள்.

நம்முடைய பூர்வ நூல்களில் ஒருஸ்தாயியில் 22 ஸ்வரங்கள் (சுருதிகள்) ஏற்பட்டிருந்தன வென்று அகோபல பண்டிதரால் எழுதப்பட்ட சங்கீத பாரிஜாத நூலினால் தெரிகிறது. அவையாவன:—

சட்ஜமத்தில் தீவிர, கும்தவதி, மந்த, சந்தோவதி என.............4
ரிஷபத்தில் தயாவதி, ரஞ்சனி, ரக்திக என..............................3
காந்தாரத்தில் ருத்ரி, குரோத, என..2
மத்தியமத்தில் வஜ்ரிக, பிரசாரணி, பிரதி, மஜானி என............4
பஞ்சமத்தில் கிஸ்தி, ரக்த, சந்திப, அலாபி என.........................4
தைவதத்தில் மதந்தி, ரோகிணி, ரம்யா என..............................3
நிஷாதத்தில் வுக்ர, ஷோபினி என...2

இதனால் மத்தியமத்தின் முதல் ஸ்வரத்திற்கு முந்தி 9 ஸ்வரங்களும், மத்தியமத்தின் கடைசி ஸ்வரத்திற்குப் பிந்தி 9 ஸ்வரங்களும் இருப்பதாகத்தெரிகிறது. நாலு மத்யமஸ்வரங்களுக்குத்தமிழில் சுத்த மத்திமம், சுத மத்திமம், அச்சுத மத்திமம், பிரதி மத்திமம் என்று பெயர் வழங்கிவருகின்றன.

பூர்வகாலத்தில் சட்ஜமம், பஞ்சமம், என்ற (2) பிர்க்ருதிஸ்வரங்களும் கூட விக்ருதி ஸ்வரங்களா யிருந்ததாகத் தெரிகிறது.

விஷயம்-6. தற்காலத்திய மொத்த ஸ்வரஸ்தானங்களின் சங்கை.

விஷயம் 4 ல் தற்காலத்தில் சாதாரண வழக்கத்திலிருக்கும் ஸ்வரஸ்தானங்கள் 12 என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த

12 ஸ்வரஸ்தானங்களுக்கு மத்தியிலும் 10 ஸ்வரஸ்தானங்களிருக்கின்றன. அவையாவன.—

சுத்தரிஷபத்திற்குக் கீழ்	ஒருரிஷபம்	இதன்பெயர்	அதிகோமள	ரி-1
,, மேல்	,,	,,	மத்தியம	ரி-2
சுத்தகாந்தாரத்துக் கீழ்	ஒரு காந்தாரம்	,,	அதிகோமள	க-3
,, மேல்	,,	,,	தீவிர	க-4
சுத்தமத்திமத்திற்கு மேல்	ஒரு மத்திமம்	,,	ஏகசுருதி	ம-5
பிரதிமத்திமத்திற்கு மேல்	,,	,,	தீவராதர	ம-6
சுத்ததைவதத்திற்குக் கீழ்	ஒருதைவதம்	,,	அதிகோமள	த-7
,, மேல்	,,	,,	திருஸ்ருதி	த-8
சுத்தநிஷாதத்திற்கு மேல்	ஒருநிஷாதம்	,,	அதிகோமள	நி-9
காகலி ,, மேல்	,,	,,	தீவிர	நி-10

முன்சொல்லப்பட்ட 12 ஸ்தானங்களுடன் இந்த 10 ஸ்தானங்களையும் சேர்த்தால் 22ஸ்வரஸ்தானங்கள் அல்லது சுருதிகள் ஏற்படுகின்றன.

விஷயம்-7. சதுச்ருதி, ஷட்ச்ருதி, ரிஷப தைவங்கள் என்னும் பெயர்களுக்குக் காரணம்.

முன்னால் சொல்லப்பட்ட 22 ஸ்வரஸ்தானக் கணக்கின்படி ப்ரக்ருதி ஸ்வரமாகிய சட்ஜமத்தை நீக்கினால் 4-வது ஸ்தானத்தில் 1-ரிஷபமும் 6-வது ஸ்தானத்தில் ஒரு ரிஷபமும் ஏற்படுகின்றன. இவைகளைத்தான், ஸ்தானத்தை உத்தேசித்து, முறையே சதுச்ருதி ரி என்றும் ஷட்ச்ருதி ரி என்றும் சொல்லப்படும். இம்மாதிரியாகவே ப்ரக்ருதி ஸ்வரமாகிய பஞ்சமத்தைநீக்கினால் 4-வது ஸ்தானத்தில் ஒருதைவதமும், 6-வது ஸ்தானத்தில் ஒருதைவதமும் ஏற்படுகின்றன. இவைகளுக்கும், ஸ்தானத்தை உத்தேசித்து, சதுச்ருதி த என்றும், ஷட்ச்ருதி த என்றும் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

விஷயம்-3. ஸ்தாயிகள்.

முன்னால் சொல்லப்பட்ட 12 ஸ்தானங்களிலிருந்து உற்பத்தியாகும் தொனிகளை மெல்லினம், இடையினம், வல்லினமென்று மூன்று வகுப்புகளாகப் பிரித்திருக்கின்றார்கள். சாதாரணமாய் நம்முடைய கண்டத்தை ஒட்டிவரும் நாதத்திற்கு மத்திமஸ்தாயி என்றும், கண்டத்திற்குக் கீழ் இருதயத்தை அநுசரித்துஉற்பத்தியாகும் மெல்லிய

அதாவது தக்கு நாதத்திற்கு மந்திரஸ்தாயி என்றும், கண்டத்திற்கு மேல் ஊர்த்தவத்தை அனுசரித்து உற்பத்தியாகிற வல்லிய அதாவது எச்சு நாதத்தை த்ாரஸ்தாயி ஸ்வரம் என்றும் சொல்லப்படும். ஆர்மோனியம், பிடில், வீணை முதலிய வாத்தியங்களில் மேலே சொல்லப்பட்ட 16 ஸ்வரங்களையும் ஒவ்வொரு ஸ்தாயியிலும் தரக்கூடிய 3 ஸ்தாயிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரிவு 11.

ஆர்மோனியம்.

விஷயம்-1. ஆர்மோனியத்தின் ஸ்தாயிகள்.

ஆர்மோனியம் என்பது மேல் நாட்டார்களுடைய பியானு, ஆர்கன் முதலிய 4, 5 ஸ்தாயிகளையுடைய வாத்தியப்பெட்டிகளை அனுசரித்து அமைக்கப்பட்ட 3, அல்லது $3\frac{1}{2}$ ஸ்தாயிகளையுடைய ஒரு சிறிய வாத்தியப்பெட்டி.

இது, இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் அதிகமாய் உபயோகப்படுகிறது. மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு மிகவும் சுலபமாகவு மிருக்கிறது. அடுத்தபக்கத்தில் அச்சிடப்பட்ட ஆர்மோனியம் படத்தில் 15 கருப்பு 21 வெள்ளை கட்டைகளையும் 3 பிரிவுகளையும் கவனிக்கவேண்டும். இந்த மூன்று பிரிவுகள்தான் மந்திரஸ்தாயி, மத்திமஸ்தாயி, தாரஸ்தாயி என்பவைகள்.

விஷயம்-2. ஸ்தாயிகளிலுள்ள ஸ்வரஸ்தானங்கள்.

ஒவ்வொரு ஸ்தாயிலும் 12 கட்டைகளிருக்கின்றன. இந்த கட்டைகள்தான் பிரிவு 1 விஷயம் 4 ல் விவரிக்கப்பட்ட 12 ஸ்வரஸ்தானங்கள். ஆர்மோனியத்தில் உள்ள 36 கட்டைகளில், ஸ்தாயி ஒன்றுக்கு ஏற்படுத்தப்பட்ட 12 கட்டைகளில் ஒவ்வொன்றும் எந்த ஸ்வரத்தைத்தரும் என்பதுவிளங்க, அடுத்தபக்கத்தில் ஒரு ஜாப்தா அச்சிடப்பட்டிருக்கிறது, அதில் மந்திர அல்லது தக்கு ஸ்தாயியில் உள்ள ஸ்வரங்களுக்குப்புள்ளி (.) எழுத்தின்கீழ்வைக்கப்பட்டிருக்கிறது. தாரா அல்லது எச்சு ஸ்தாயியில் உள்ள ஸவரங்களுக்குப் புள்ளி (.) எழுத்தின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. மத்திம ஸ்தாயிக்குச் சம்பந்தப்பட்ட ஸ்வரங்களுக்கு எழுத்தின் கீழும் மேலும் புள்ளிவைக்காமல் சுத்தமாய் அச்சிடப்பட்டிருக்கிறது. இதை மாணவர்கள் கவனத்தில் வைக்கவேண்டும்.


மந்திரஸ்தாயி
(தக்கு)
மத்திமஸ்தாயி
தாரஸ்தாயி
1 3 5 6 8 10 12 13 15 17 18 20 22 24 25 27 29 30 32 34 36
2 4 7 9 11 14 16 19 21 23 26 28 31 33 35

ஆர்மோனியப்படம்.

ஸ்வர அடையாள ஜாப்தா

எண்.	மந்திரஸ்தாயி ஸ்வரங்கள்		மத்திமஸ்தாயி ஸ்வரங்கள்		தாரஸ்தாயி ஸ்வரங்கள்
1	ஸ (ப்ர்க்ருதி)	13	ஸ (ப்ரக்ருதி)	25	ஸ் (ப்ர்க்ருதி)
2	ரி (சுத்தம்)	14	ரி -சு	26	ரி் -சு
3	ரி (சதுஸ்ருதி) க, (சுத்தம்)	15	ரி -ச, க- சு	27	ரி் -ச, க் -சு
4	ரி (ஷட்சுருதி) க, (சாதாரணம்)	16	ரி -ஷ. க-சா	28	ரி், ஷ, க் சா
5	க (அந்தரம்)	17	க -அ	29	க் .அ
6	ம (சுத்தம்)	18	ம -சு	30	ம் - சு
7	ம (பிரதி)	19	ம -பி	31	ம் -பி
8	ப (ப்ர்க்ருதி)	20	ப .(ப்ர்க்ருதி)	32	ப் (ப்ர்க்ருதி)
9	த (சுத்தம்)	21	த -சு	33	த் -சு
10	த (சதுஸ்ருதி) நி, (சுத்தம்)	22	த -ச, நி-சு	34	த் -ச, நி் -க
11	த (ஷட்சுருதி) நி, (கைசிக)	23	த -ஷ, நி -கை	35	த்-ஷ, நி் -கை
12	நி (காகலி)	24	நி -கா	36	நி். கா

விஷயம் - 3. ஸ்வர ஸ்தானங்களின் அதிகாரங்கள் முதலியன.

முன் பக்கத்தில் வரையப்பட்டிருக்கிற ஜாப்தாவில் காட்டியபடி மூன்று ஸ்தாயிகளிலும், சட்ஜமத்திற்கு அடுத்த 3, 4, 10, 11 ஸ்தானங்கள் ஒவ்வொன்றும் முறையே இரண்டு இரண்டு ஸ்வரங்களைத் தருகின்றதை மாணவர்கள் கருத்தில் வைக்கவேண்டும்.

இரண்டாவது முக்கிய விஷயம் என்னவென்ருல்:—

சுத்த ரிஷபத்துடன்			3 காந்தாரங்களும் கூடும்
சதுஸ்ருதி	,,	,,	2 காந்தாரங்களும் மாத்திரம்கூடும்
ஷட்சுருதி	,,	,,	1 காந்தாரம் தான்கூடும்
இம்மாதிரியாகவே			
சுத்த தைவதத்துடன்		,,	3 நிஷாதங்கள் கூடும்
சதுஸ்ருதி	,,	,,	2 நிஷாதங்கள் மாத்திரம்கூடும்
ஷட்சுருதி	,,	,,	1 நிஷாதம் தான் கூடும்

மூன்ருவது முக்கிய விஷயம் யாதெனில்:—

3 என்று இலக்கமிட்ட ஸ்தானம், ஒரே ராகத்தில் ச-ரி, சு-க என்கிற இரண்டு ஸ்வர அதிகாரத்தைப் பெறமாட்டாது. இவ்விதமாகவே 4-வது ஸ்தானம் ஷ-ரி, சா-க, என்கிற இரண்டு ஸ்வர அதிகாரத்தையும், 10-வது ஸ்தானம் ச-த, சு-நி என்கிறஇரண்டு ஸ்வர அதிகாரத்தையும், 11-வது ஸ்தானம் ஷ-த, கை-நி என்கிற இரண்டு ஸ்வர அதிகாரத்தையும் ஒரே ராகத்தில் எந்த ஸ்தாயியிலும் அடையமாட்டா.

விஷயம்—4. ஆதாரஸ்வரம்.

ச (ஷட்ஜமம்) என்கிற ஸ்வரம் தான் ஆர்மோனியத்திற்கு முக்கிய ஆதாரஸ்வரம். இதை ஒரு குறித்த இலக்கமிட்ட கட்டையினுல் தான் அடையவேண்டும் என்கிற அவசியமில்லை. சாதாரணமாய் புருஷர்க ளுடைய சாரீரத்திற்கு மந்திர ஸ்தாயியில், 4, 5, 6, அல்லது 7 என்று இலக்கமிட்ட கட்டைகளில் ஒத்துமையான ஒரு கட்டையையும், ஸ்திரீகளுக்கு 8, 9, 10 அல்லது 11-என்று இலக்கமிட்ட கட் டைகளில் ஒத்துமையான ஒன்றையும் உசிதம்போல ஆதார சுருதி

யாய் அதாவது மத்திமஸ்தாயியின் சட்ஜமமாய் வைத்துக் கொண்டு வாசிக்கவேண்டும். இதிலிருந்து 8-வது கட்டை மத்திம பஞ்சம ஆதாரஸ்வரமாகும். 13-வது கட்டை தார ஷட்ஜமமாகும்; அதிலிருந்து 8-வது கட்டை தார பஞ்சமமாகும். ஆதார ஷட்ஜ மத்திலிருந்து கீழ் 8-வது கட்டை மந்திர பஞ்சமமாகும்.

விஷயம்—5. வழக்கத்தில் உபயோகப்படும் ஸ்தாயிகள்.

ஆர்மோனியத்தில் 3 ஸ்தாயிகள் அமைக்கப் பட்டிருந்த போதிலும் வழக்கத்தில் இரண்டு ஸ்தாயிகள் மாத்திரம் அதாவது இருபத்தினன்கு கட்டைகள் மாத்திரம் உபயோகிக்கப்படுகின்றன. ஆதார ஷட்ஜமத்திற்கு கீழ் இருக்கும் கட்டைகள் மந்திர (தக்கு) ஸ்தாயி ஆகும். ஆதார ஷட்ஜமத்திலிருந்து மேல் 12 கட்டைகள் மத்திம ஸ்தாயி ஆகும்; அதற்கு மேலிருக்கும் 12 கட்டைகள் தார (எச்சு) ஸ்தாயி ஆகும். ஆனல் தார ஸ்தாயியில் 7-வது கட்டையாகிய பிரதி மத்திமம் வரையிலும் தான் உபயோகமாகும். மேற் சொல்லப்பட்ட ஸ்வரஸ்தானங்களினல் கீதங்கள், வர்ணங்கள், கீர்த்தனைகள் முதலியன வெல்லாம் வாசிக்கலாம்.

விஷயம்—6. வாசிக்கும் வழி.

இடது கையால் (Bellows) என்கிற காற்றுத் துருத்தியை அசைத்துக்கொண்டு சாரீரத்திற்கு உசிதமான மந்திரஸ்தாயியின் ஒரு கட்டையை ஆதார (மத்திம) ஷட்ஜமமாய் வைத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு இராகத்திற்குத் தக்கினபடியுள்ள ரி, க, ம, த, நி என்கிற விக்ருதி ஸ்வரங்களைத்தரும் கட்டைகளை வலது கைவிரல்களால் தட்டவேண்டும். எந்த எந்த விரல்களை உபயோகிக் வேண்டுமென்றல்.—

ச, ப,	என்கிற ஸ்வரஸ்தானக்கட்டைகளுக்குத் தனித்தனி			பெருவிரலை,
ரி, த,	,,	,,	,,	ஆள்காட்டி விரலை,
க, நி	,,	,,	,,	நடுவிரலை,
ம, ச் (எச்சு)	,,	,,	,,	மோதிர விரலை.

இந்தஒழுங்கு மூன்று ஸ்தாயிகளுக்கும் அமைந்தது. விரல்களைமாற்றி வேறு விதமாய் அப்பியாசம் செய்தல் உசிதமல்ல.

பிரிவு-III.

Violin என்கிற பிட்டில்

விஷயம்—1. பிட்டிலின் அமைப்பு

பிட்டில் என்பது ஒன்றுக்கு மேல் ஒன்று உயர்ந்த நாதத்தைத் தரக்கூடிய நான்கு வெவ்வேறு கனத்தையுடைய தந்திகளால் அமைக்கப்பட்டதும், இலேசான மரச்சக்கைகளால் செய்யப்பட்டதுமான ஒரு வாத்தியம். இது வில்லுடன் உபயோகிக்கப்படும். இதுவும் பண்டைக் காலத்திய இந்துதேச வாத்தியமான போதிலும், தற்காலம் மேல் நாட்டாரின் வாத்தியங்களில் ஒன்ருகப் பாவிக்கப்படுகிறது.

வித்வான்கள் இதை ஊமை வாத்தியம் என்று சொல்லுகிறூர்கள். ஏனென்ருல் ச, ப என்கிற இரண்டு ஆதார ஸ்வரங்களும் கூட அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட தந்திகளைத் தகுந்த பிகுவுடன் முறுக்கினுலல்லாமல் அடையப்பட மாட்டா. இந்த ஆதார ஸ்வரங்களை அடைந்த பிறகும் மற்ற 10 ஸ்வரஸ்தானங்களுக்கும், ஆர்மோனியம், வீணை முதலிய வாத்தியங்களைப் போல இன்ன இன்ன இடந்தானென்று குறிப்பிக்கப்பட்டிருக்க வில்லை. பிடிலில் மொத்தம் 12 ஸ்தானங்கள் வழங்கிவந்தாலும், பூர்வ நூல்களின் படி பிரிவு 1. விஷயம் 6-ல் சொல்லிய 22 ஸ்வரங்களையும் நாம் அடையலாம். இன்னும் அநேக விஷயங்களை யோசிக்கின் ஆர்மோனியத்தை விட இது மிக மேலான வாத்தியம் என்று சொல்லலாம்.

விஷயம்—2. பிட்டிலின் ஸ்தாயிகளும், ஸ்வரஸ்தானங்களும்.

பிட்டிலிலுள்ள ஸ்தாயிகளைத் தெரிந்துகொள்ள அடுத்த 13-வது பக்கத்தில் காட்டப்பட்ட பிட்டில் படத்தைப் பார்க்கவும். அதில் வெவ்வேறுவிதமான நான்கு தந்திகள் போடப்பட்டிருக்கின்றன. படத்தில் இந்த நான்கு தந்திகளுக்கு A. B. C. D. என்று அடையாளங்களிடப் பட்டிருக்கின்றன. A. தந்தி குறைந்த நாதத்தையுடைய ஸ்வரங்களைத் தரும். D. தந்தியோ மற்ற மூன்று தந்திகளைவிட உயர்ந்த நாதத்தையுடைய ஸ்வரங்களைத் தரும்.

பிட்டில் படத்தில் காட்டியிருக்கும் 1 முதல் 12 வரையில் இலக்கமிட்ட ஸ்தானங்கள் 12 ஸ்வரஸ்தானங்களை உத்தேசமாய்க்காட்

டும். ஆனல் அந்த ஸ்தானங்களை ஸ்திரமாய் நிர்ணயிக்க ஸ்வரஞான மும், அனுபவமும் அவசியம். ஆனல் ஒவ்வொரு இலக்க ஸ்தானமும் உத்தேசமாய் என்ன என்ன ஸ்வரத்தைத் தருமென்பது பிரிவு II விஷயம்-2-ன் பின் அச்சிடப்பட்ட ஜாப்தாவில் குறிப்பித்தபடியே; வித்தியாசம் கிடையாது.

இந்த 12 ஸ்வரஸ்தானங்களில், ஆதார ஸ்வரங்களாகிய மந்திர ஸ்தாயி ச, ப, வுக்கும், மத்திமஸ்தாயி ச, ப, வுக்கும் முறையே 1-8 என்கிற லக்கங்களை பிட்டிலின் கீழ்ப்பக்கம் போடாமல், மேற்பக்கம் போட்டிருப்பதைக் கவனிக்கவும்.

இதற்குக் காரணம், ஆதாரஸ்வரங்கள் நான்கும், பிட்டில் தந்திகளின் பேரில் விரல்களை வைத்து அழுத்தாமல், வில்லை குறித்த தந்திகளின்பேரில் போடுவதில் மாத்திரம் அடையப்படுகிறது என்பதுதான். ஆகையினல் மேற்குறித்த 4 ஆதாரஸ்வரஸ்தானங்களையும் பிட்டிலின்மேற்புறம் 1-8-1-8 என்னும்இலக்கங்களினல் காட்டப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு ஸ்தாயிகளிலும், ஒவ்வொன்றிலுமுள்ள மற்ற பத்து ஸ்வரங்களும், தார ஸ்தாயியின் 12 ஸ்வரங்களும் குறித்த தந்தியில் குறித்த ஸ்தானத்தில் விரலைவைத்து தட்டுவதனல்தான் அடையப்படும்.

ஒவ்வொரு தந்தியும் என்ன என்ன ஸ்தாயிஎன்பதும், என்ன என்ன ஸ்வரங்களைத்தரும் என்பதும் அடியில் காட்டப்பட்டிருக்கின்றன, அவையாவன :—

A தந்தியின் கீழ்ப்பாகம் மந்திரஸ்தாயி, ச, ரி, க, ம;

A ,, மேல் பாகம் { மந்திரஸ்தாயி ப, த, நி யும்,
மற்ற உயர்ந்தஸ்தாயி ஸ்வரங்களும் ;

B தந்தியில் கீழ்ப்பாகம் மந்திர ஸ்தாயி ப, த, நி;

B ,, மேல் பாகம் { ச, ரி, க, ம, வும்
மற்ற உயர்ந்த ஸ்தாயி ஸ்வரங்களும்;

C ,, கீழ்ப்பாகம் மத்திம ஸ்தாயி ச, ரி, க, ம ;

C ,, மேல்பாகம் { மத்திம ஸ்தாயி ப, த, நி, யும்,
மற்ற உயர்ந்த ஸ்தாயி ஸ்வரங்களும்;

ஜன்ய ராகஸ்வரங்களின்

அனுபந்தம்.



பிட்டில் படம்.

1. ச; 2, சு-ரி; 3, ச-ரி, சு-க; 4, ஷ-ரி, சா-க; 5, அ-க; 6, சு-ம; 7, பி-ம; 8, ப; 9, சு-த; 10, ச-த, சு-நி; 11, ஷ-த, கை-நி; 12, கா-நி.

D தந்தியில் கீழ்ப்பாகம் மத்திமஸ்தாயி ப, த, நி ;

D ,, E அடையாளமிட்ட மத்தியபாகம் தாரத்தில் ச, ரி, க, ம ;

D தந்தியில் E அடையாளமிட்ட பாகத்திற்கு மேல்பாகம் தாரத்தில் ப, த, நி, யும்.

ஒவ்வொரு தந்தியும் முறுக்காணிக்கு மேல் ஏற ஏற உயர்ந்த ஸ்வரத்தைத்தரும். கைதேர்ந்த பிடில்வித்வான்கள் B.C தந்திகள் இரண்டினுலேயே கீர்த்தனைகளை வாசித்திருக்கிறார்கள் என்று கதையாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தேர்ச்சியை அடைவது வெகு கஷ்டம்.

விஷயம்—3. பிட்டிலின் ஆதாரஸ்வரங்கள்.

பிட்டிலில் ஆதார ஸ்வரங்கள் மத்திம ஸ்தாயிலுள்ள ப்ர்க்ருதி ஸ்வரங்களாகிய ஷட்ஜமமும் பஞ்சமுமே. ஆர்மோனியத்தில் ஆதார ஸ்வரமாகிய ஷட்ஜமத்தை ஸ்திரி, புருஷர்களுடைய சாரீரத்திற்கு அநுசரணையாக மந்திரஸ்தாயியின் ஒருகட்டையை வைத்துக்கொண்டால் அதிலிருந்து 8-வதுகட்டை பஞ்சம ஸ்வரத்தைத் தருகிறது. பிடிலில் ஆதாரஸ்வரங்களை இவ்வளவு சுலபத்தில் அடைய மார்க்கமில்லை; ஆனால் அவைகளைஎப்படிப் பெறுவது என்றால்:—C தந்தியில், அதன் எந்தப் பாகத்தையும் விரலால் தட்டாமல் வில்லை மாத்திரம் அந்தத்தந்தியில், பின்னால்வரும் விஷயம்-4-ல். சொல்லியபடி, போடுவதனால் உற்பத்தியாகும் ஸ்வரம், மத்திம ச பேசும் வரையிலும், தந்தியைப்பிகிந்துகொண்டும், தளர்த்திக் கொண்டுமிருக்கவேண்டும். பிற்பாடு D தந்தியை மத்திம ப பேசும்வரையிலும் பிகிதல் அல்லது தளர்த்தல் வேண்டும். இதன் பிறகு A. B. தந்திகள் முறையே மந்திர ச̣, ப̣, ஸ்வரங்கள் தரும்வரையிலும் அவைகளையும் பிகிய அல்லது தளர்த்த வேண்டும். இதைத்தான் சுருதி கூட்டுவது என்றுசொல்வது. இதுமுடிந்ததும் A, C. தந்திகளில் படத்தில் 8 என்று குறித்த உத்தேகஸ்தானத்திலும், அதன் சமீபத்தில் மேலும் கீழும் விரலை வைத்து அழுத்தினால் முறையே, ப̣, ப, நாதங்கள் எங்குஉண்டாகின்றதோ அந்தஇடங்களையும், B.D. தந்திகளில் படத்தில்குறித்த உத்தேகஸ்தானத்திலும் அதன் பக்கங்களிலும் விரலை வைத்து அழுத்தினால் முறையே, ச, ச் நாதங்கள்எங்கு உண்டாகிறதோ அந்த இடங்களையும் உறுதிப்பாடுசெய்து கொள்ளவேண்டும். அதன்பின் A. C. தந்திகளில்

ஒவ்வொன்றிலுமுள்ள ச, ப; ச, ப ஸ்வரங்களுக்கு மத்தியிலுள்ள 6 ஸ்தானங்களையும், B, D. தந்திகளில் ப, ச; ப, ச், இவைகளுக்கு மத்தியில் உள்ள 4 ஸ்தானங்களையும் நிதானம்செய்துகொள்ளல்வேண்டும். இது முடிந்ததும் D தந்தியில் E அடையாளமிட்ட பாகத்தில் ச் வுக்கு மேலுள்ள ரி, க், ம், ப் இந்த ஸ்வர ஸ்தானங்களையும் ஆராய்ந்து அறியவேண்டும். பிறகு ஸ்வர ஸ்தானங்களை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அப்பியாசம் செய்யவேண்டும்.

விஷயம்-4. வழக்கத்தில் உபயோகமாகும் தந்திகளினுடைய பாகங்கள்.

வழக்கத்தில் நான்கு தந்திகளின் கீழ்ப்பாகங்களையும், D அடையாளமிட்ட தந்தியில் E அடையாளமிட்ட பாகத்தையும் தான் உபயோகிக்கிறார்கள். படத்தில் இந்தப்பாகங்களிலுள்ள ஸ்வர ஸ்தானங்களுக்கு மாத்திரம் இலக்கங்கள் போடப்பட்டிருக்கின்றன.

விஷயம்-5. பிட்டில் படத்திலுள்ள இலக்கங்களின் கருத்து.

படத்தில் குறிக்கப்பட்ட 1 முதல் 12 வரையிலுமுள்ள இலக்கங்கள் மூன்று ஸ்தாயிகளுக்கு மமையும். இலக்கங்களுக்கு ஸ்தாயி பேதமில்லை. உதாரணமாக, 2 இலக்கம் ரி, ரி, ரி என்று ஸ்தாயிக்குத் தக்கபடி வைத்துக்கொள்ளல் வேண்டும்-ஆனால் ஆதாரமந்திர மத்திம ஸ்வரங்களாகிய ச, ப; ச, ப, இவைகளுக்கு விரல்களால் அழுத்தும் ஸ்தானம் கிடையாது. வில்லைப் போடுவதனால் மாத்திரம் அந்த ஸ்வரங்கள் அடையப்படும். ஆகையினால் அவைகளுக்கு இலக்கங்கள் வில் போடப்படுமிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு இலக்கமும் எந்த ஸ்வரத்தைத் தரும் என்று படத்தின் கீழ்க் காட்டப்பட்டிருக்கிறது.

விஷயம்-6. பிட்டிலை வாசிக்கும் வழி.

பிட்டிலை வாசிக்க ஆரம்பிக்கிற மாணவர்கள் பிட்டிலின் கீழ்ப் பாகத்தை அதாவது முறுக்காணிகளை யுடைய பாகத்தை வலது பாதம் கணுவுக்குப் பக்கத்தில் வைத்து, சவுகரியப்படி மார்பினால் அல்லது தவடையினால் அழுத்திப் பிடிக்க வேண்டும். வில்லை வலது கைப்பெருவிரலைக் கீழும்மற்றநான்கு விரல்களையும்மேலுமாகவைத்துப் பிடிக்க வேண்டும். இப்படிப் பிடிப்பதில் சுட்டுவிரலை வில்லினுடைய

கைப்பிடிப் பாகத்தின் அடி நுனிக்கு ஒரு அங்குல தூரத்திலும், ஆள் காட்டி விரலை நுனிக்கு நான்கு அங்குல தூரத்திலும் அமையும் படி பிடிக்க வேண்டும். வில்லைத் தந்தியின் பேரில் எந்த இடத்தில் போடவேண்டு மென்றால், (Bridge) பாலத்திற்குக் கீழும் (Finger Board) என்கிற தந்திகளுக்குக்கீழ் அமைக்கப்பட்ட சக்கைக்குமேலு முள்ள பாகத்தின் மத்தியில் தான். குறித்த தந்திகளைக் குறித்த ஸ்தானத்தில் இடது கையின் கட்டை, சுண்டுவிரல்கள் நீங்கலாக மற்ற மூன்று விரல்களில் குறித்த ஒரு விரலால் வலுவாக அழுத்த வேண்டும். எல்லாவித ரி, த ஸ்வரங்களுக்கு ஆள்காட்டி விரலையும் எல்லாவித க, நி ஸ்வரங்களுக்கு நடுவிரலையும் உபயோகிக்க வேண்டும். ம ஸ்வரங்களுக்கும், ṇி, நி ஸ்வரத்திற்கு மேல் அடுத்த ச, ச் ஸ்வரத்திற்கும் மோதிர விரலை உபயோகிக்கவேண்டும். ஆதாரஸ் வரங்களுக்கு விரலை உபயோகிக்காமல் வில்லை மாத்திரம் போட வேண்டுமென்பது ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட விதிக்கு விலக்கு பின்னால் சொல்லபடும் சந்தர்ப்பங்கள்:—

(1) ஆவர்த்தத்தின் விபாக கடைசி ஸ்வரம்,

A -	தந்தியில்	மந்திரஸ்தாயி	ப வும்
B	”	மத்திம ”	ரி யும்
C	”	மத்திம ”	ப வும்
D	”	தார ”	ரி யும்,

வந்தால் சுண்டுவிரலை உபயோகிக்கலாம்.

(2) இரண்டு, மூன்று அல்லது நான்கு தடவை ஒரேஸ்வரத்தை வாசிக்கவேண்டிய, ஸ்புரிதம், கம்பிதம் முதலிய கமகங்கள்வந்தால், ப்ரக்ருதி ஸ்வரமாகிய ப, ப, வுக்கு A, C தந்திகளில் 8 இலக்கமிட்ட ஸ்தானத்தில் சுண்டுவிரலை உபயோகப்படுத்தலாம்.

மாணவர்கள் ஆரம்பத்திலேயே கற்றுக் கொள்ள வேண்டிய இன்னமிரண்டு முக்கிய அப்பியாசங்கள என்னனென்றால்:—
பிட்டிவில் வில்லைப்போடும் போது,

(1) ஸ்வரங்களைத் தட்டும் இடது கைவிரல்கள் தந்திகளுக்குத் தூரத்திலில்லாமல் அதிக சமீபத்தில் ஒட்டினாற் போலிருக்க வேண்டும்.

(2) அவரோகணத்தில் சமபந்துக்குத்தக்கபடி நடுவிரலையும் மோதிர விரலையும் சேர்த்து, அல்லது நடுவிரலையும், ஆள்காட்டி விரலையுஞ் சேர்த்து, மேல் ஸ்வரம் வாசிக்கும்போது தந்தியின்பேரில் வைத்துத் தட்டிக் கீழ் ஸ்வரம் வாசிக்கும்போது மேல் ஸ்வரத்தின்பேரில் வைத்த விரலை எடுத்துவிடல் வேண்டும்.

(உதாரணம்). மாயாமாளவகவுள, சங்கராபரண, ராகங்களில் ம ஸ்வரம் வாசிக்கும்போது மோதிர விரலையும், நடுவிரலையும் சேர்த்து வைத்து, அடுத்த க ஸ்வரம் வாசிக்கும்போது மோதிரவிரலை எடுத்து விடல்வேண்டும்.

பிரிவு IV

கமகங்கள் முதலியன

விஷயம்—1. கமகங்கள்.

கமகம் என்றால் ஸ்வரங்களின் தொகுதிகளால் அதாவது சப்த ஸ்வரங்களின் சங்கமங்களினால் உற்பத்தியாகின்ற இன்னிசை. அவைகள் பத்து வகைப்படும். அவையாவன:—

1. ஆரோஹணம். ச, ரி, க, ம, ப, த, நி, ச் என்று கீழ் ஸ்வரத்திலிருந்து ராக வரிசைக் கிரமமாய் மேலுக்கு ஏறுதல்.

2. அவரோஹணம். ச், நி, த, ப, ம, க, ரி, ச என்று மேல் ஸ்வரத்திலிருந்து ராக வரிசைக்கிரமமாய் கீழுக்கு இறங்குதல்.

3. டால். சப, சம, சக என்று ஒரு ஸ்வரத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு வரிசையாக அடுத்த ஸ்வரங்களை, ராகத்தை அநுசரித்து, ஆரோஹணத்தில் குலுக்குதல்.

4. ஸ்புரிதம். சச, ரிரி, கக, மம, என்கிற இரட்டை ஸ்வரங்களை வாசித்தல்.

5. கம்பிதம். பா பபப என்று ஒரு ஸ்வரஸ்தானத்தை நடுங்க அசைத்தல்.

6. ஆஹதம். சரி, ரிக, கம, மப என்று ஒரு இசையின் கடை ஸ்வரத்தை அடுத்த இசையின் முதல் ஸ்வரமாக, ராகத்தை அநுசரித்து அவரோஹணத்தில் வாசித்தல்.

7. பிரத்தியாஹதம். ச்நி, நித, தப, பம, என்றுஒரு இசையின் கடை ஸ்வரத்தை அடுத்த இசையின் முதல் ஸ்வரமாக, ராகத்தை அனுசரித்து அவரோஹணத்தில் வாசித்தல்.

8. திருபுச்சம். ரிரிரி, ககக, மமம என்று முதல் இரண்டு ஸ்வரங்களையும் மூன்று தடவையும் மூன்றுவது ஸ்வரத்தை இரண்டு முறையும் வாசித்தல்.

9. ஆந்தோளம். சரிச பாப ரிகரி மாம என்கிற வரிசைப்படி ராகத்தை அனுசரித்து வாசித்தல்.

10. மூர்ச்சனே. சரிகமபதநி ரிகமபதநிச் கம்பதநிச்ரி என்று ஒவ்வொரு இசையிலுள்ள முதல் ஸ்வரத்தை விட்டு விட்டு, ஆனல் விடப்பட்ட ஸ்வரத்தை கடைசி ஸ்வரமாய்ச் சேர்த்து வாசித்தல்.

விஷயம்-2. வாதி, சம்வாதிஸ்வரங்கள்.

1. வாதிஸ்வரம் என்றால் ஒரு குறித்த ராகத்தின் முக்கிய ஸ்வரம் ; இதை அம்ச ஸ்வரம் என்றும் சொல்லுகிறார்கள். இந்த ஸ்வரத்தினல் தான், சம்பந்தப்பட்ட ராகத்தை விஸ்தரிக்கலாம். அதன் விசேஷகுணங்களையும், ரஞ்சகத்தையும் விரித்துக் காட்டலாம். அந்த ஸ்வரத்தை அடிக்கடி உபயோகிக்கலாம்; நீட்டலாம். இதை ராஜா ஸ்வரம் என்று சொல்லலாம். இதற்கு மந்திரியும், விரோதிகளும், அடிமைகளும் உண்டு.

2. சம்வாதிஸ்வரம். பிரிவு-1. விஷயம் 6-ல் சொல்லப்பட்ட 22 சுருதிக் கணக்குப் பிரகாரம் வாதி ஸ்வரத்திற்குக் கீழாகவாவது மேலாகவாவது 9 முதல் 13 வரையிலுள்ள ஸ்வரங்களில் ஒரு ஸ்வரம். இந்த 5 ஸ்வரங்களும் வாதிஸ்வரத்திற்குச் சம்வாதி அதாவது மந்திரி; நட்பு ஸ்வரம். ராஜாவாலாக வேண்டிய வேலையை நிர்வகிக்கக் கூடிய சக்தியையுடையது. சப்தஸ்வரக் கணக்கின்படி பூட்டகமாய் இது 4-வது அல்லது 5-வது ஸ்வரம். எப்படி யென்றால்:—

வாதி	சம்வாதி
ச—ஸ்வரத்திற்குக்கு.............	ம, ப
ரி— ,, ...	த
க— ,, ...	நி

வாதி		சம்வாதி
ம—ஸ்வரத்திற்கு	....	நி, ச
ப—	,, ...	ச
த—	,, ...	ரி
நி—	,, ...	க, ம

தற்கால சம்பிரதாயப்படி, ரி-க்கு ப வையும் ப-வுக்கு—ரி யையும் சம்வாதியாய் உபயோகிப்பது மல்லாமல், க-வைத்தவிர வேறு எந்த ஸ்வரத்திற்கும் நி சம்வாதியாயும், நி-யைத்தவிர வேறு எந்த ஸ்வரதத்திற்கும் க-சம்வாதியாயும் வாராதென்றும் விதிக்கப் பட்டிருக்கிறது.

3. விவாதிஸ்வரம், இது வாதிஸ்வரத்திலிருந்து 22 சுருதிக் கணக்கின்படி 2 சுருதிகளுக்குள்ளிருக்கிற ஸ்வரம். இது பகை ஸ்வரம். குறித்த ராகத்தின் குணத்தையும், அழகையும் கெடுத்து விடும்.

அனுவாதி ஸ்வரங்கள்.

4. அனுவாதிஸ்வரம் என்றால் வாதிஸ்வரத்திற்குச் சம்வாதியும், விவாதியுமில்லாத ஸ்வரம். இது வாதிக்கு அடிமை.

விஷயம்-3. தீவர, கோமள ஸ்வரங்கள்.

சுத்த ரிஷபத்தைக் கோமள ரிஷபம் என்றும், சாதாரண காந்தாரத்தைக் கோமள காந்தாரம் என்றும், கைசிக நிஷாதத்தைக் கோமள நிஷாதம் என்றும், சதுஸ்ருதி ரிஷபத்தைத் தீவர ரிஷபம் என்றும், சதுஸ்ருதி தைவதத்தைத் தீவர தைவதம் என்றும், காகலிநிஷாதத்தைத் தீவர நிஸாதம் என்றும் சொல்லப்படும்.

இது தவிர, சில ராகங்களை வாசிக்கும்போது அந்த ராகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆரோகண அவரோகணங்களுக்குச் சம்பந்தப்பட்ட ஸ்வரம், 3 வகுப்புகளை யுடைய விக்ருதி ஸ்வரங்களாகிய ரி, க, த, நி இவைகள் ஒவ்வொன்றினுடைய வகுப்புகளில் ஒரு ஸ்வரமாயிருந்தால், அதற்குப் பதிலாக, அதற்கு அடுத்த ஸ்வரத்தை உபயோகப்படுத்துவது வழக்கமாயிருக்கிறது. இப்படி உபயோகிப்பதில் உபயோகிக்கப்பட்ட ஸ்வரம் உயர்ந்த சுருதியிலிருந்தால் அதை தீவர ஸ்வரம் என்றும், கீழ்ச் சுருதியிலிருந்தால் அதைக் கோமள ஸ்வரம் என்றும் சொல்லப்படும்.

அத்தியாயம் III.

ராகங்கள்.

விஷயம் 1 பதத்தின் அருத்தம்.

ராகம் என்பது ஸ்வரத்தொகுதிகளின் அடுக்குகளை அதாவது ஸ்வரங்களின் சங்கமங்களை உச்சரிப்பதனுல் உண்டாகும், காதுக்கு இன்பத்தை விளைவிக்ககூடிய ஒரு இன்னிசை. ராகங்கள், ஸ்வர சங்கம பேதங்களுக்குத் தக்கபடி பக்தி, விரக்தி, சோகம், தைரியம் சந்தோஷம், அன்பு, ஆச்சரியம் முதலிய மனத்தின் மாறுதல்களைத் தரும் சக்தியையுடையன.

விஷயம்-2. மேளகர்த்தா ராகங்களின் வகுப்புகள்.

நம்முடைய முன்னேர்களால் ஏற்படுத்தப்பட்ட வரிசைக்கிரமப் பிரகாரம் ச்ப்த ஸ்வரங்களை பலவகுப்புகளாக அடுக்குவதனுல், பல விதமான ராகங்கள் உண்டாகின்றன. ஸ்வரங்கள் 16 என்றும் அவைகளின் ஸ்தானங்கள் 12 என்றும் தற்காலத்தில் வழங்கிவருகின்றன. இந்த 12 ஸ்தானங்களையும் மாணவர்கள் மறுபடியும் கவனிக்க அவை இதனடியில் எழுதப்பட்டிருக்கின்றன :—

1. ச,
2. சு - ரி,
3. ச - ரி, சு - க,
4. ஷ - ரி, சா - க,
5. அ - க,
6. சு - ம,
7. பி - ம,
8. ப,
9. சு - த,
10. ச - த, சு - நி,
11. ஷ - த, கை-நி,
12. கா - நி.

சப்த ஸ்வரங்களில் விக்ருதி ஸ்வரங்களான ரி, க, த, நி, ஒவ்வொன்றும் மும்மூன்று பிரிவுகளை உடைத்தாயிருக்கின்றன வென்பதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளல் வேண்டும். நாம் கவனிக்க வேண்டிய இன்னொருவிஷயம், II-வது அத்தியாயத்திற் சொல்லியபடி,

(i) சு - ரி ஒன்றுமாத்திரம் அதற்குமேல் உள்ள ஸ்வரங்களாகிய சு - க, சா - க, அ - க, இவைகள் மூன்றுடனும் சேரும்.

(ii) ச-ரி யுடன் அதற்குமேல் உள்ள ஸ்வரங்களாகிய சா-க, அ-க இவைகளிரண்டு மாத்திரம் சேரும்; ஏனென்றால் ச-ரி யும், சு-க வும் ஒரே சுருதியாகிய 3-வது ஸ்தானத்திலிருக்கின்றன.

(iii) ஷ-ரி யுடனேயோ அதற்குமேல் ஸ்வரமாகிய அ-க ஒன்று மாத்திரம் சேரும்; ஏனென்றால் ஷ-ரி யும், சா-க வும் 4-வது சுருதி ஸ்தானத்திலிருக்கின்றன.

ஆகையினால் ரிஷப, காந்தார சங்கமங்களினால் 6 வகுப்புகள் உண்டாகின்றன. அவையாவன.

(1) சு-ரி+சு-க (4) ச-ரி+சா-க (6) ஷ-ரி+அ-க
(2) சு-ரி+சா-க (5) ச-ரி+அ-க
(3) சு-ரி+அ-க

இம்மாதிரியாகவே தைவத, நிஷாதங்களின் சங்கமங்களில் 6 வகுப்புகள் உண்டாகின்றன:—

(1) சு-த+சு-நி (4) ச-த+கை-நி (6) ஷ-த+கா-நி
(2) சு-த+கை-நி (5) ச-த+கா-நி
(3) சு-த+கா-நி

முதலில் சொல்லப்பட்ட 6 ரிஷப காந்தார வகுப்புகள் ஒவ்வொன்றும், இரண்டாவது சொல்லப்பட்ட 6 தைவத நிஷாத வகுப்புகள் ஒவ்வொன்றினுடன் கலப்பதால் ஆறு × ஆறு முப்பதாறு பேதங்கள் ஏற்படுகின்றன. இனி மத்திமம், சுத்த மத்திமம், பிரதிமத்திமம் என்று இரண்டு வகுப்புகளையுடையன வாதலால் மேலே சொல்லப்பட்ட 36 கலப்புகள், சுத்த மத்திமத்துடன் சேர்ந்து 36 ராகங்களும், பிரதி மத்திமத்துடன் சேர்ந்து 36 ராகங்களும், ஆகமொத்தம் 72 ஆதார ராகங்கள் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளைத்தான் ஜனகராகங்கள் என்றும், தாய் ராகங்கள் என்றும், மேளகர்த்தா ராகங்கள் என்றும் சொல்லுவார்கள்.

சுத்த மத்திமத்துடன் சேர்ந்த 36 ராகங்களுக்கும் சுத்தமத்திம மேளகர்த்தா வென்றும், பிரதி மத்திமத்துடன் சேர்ந்த 36 ராகங்களுக்கும் பிரதிமத்திம மேளகர்த்தா வென்றும் பெயர்களிடப் பட்டிருக்கின்றன. மொத்தம் 72 மேள கர்த்தாக்களும் சம்பூரண சம்பூரண ராகங்கள். அதாவது அவைகள் ஆரோஹணத்திலும், அவரோஹணத்திலும் சப்த ஸ்வரங்களையும் தழுவியிருக்கும்.

மேளகர்த்தா ராகப் பதக்கம்.

இது மேளகர்த்தாக்களின் ஸ்வரபேதங்களைக் காட்டும்.

பதக்கம் **சுத்த மத்திம** ராக ஸ்வர பேதங்களைக் காட்டுகின்றது. 6-வது சு·ம கூண்டிலிலுள்ள **ம** வை 7-வது பி-ம கூண்டில் மாற்றிக் கொண்டால் **பிரதி மத்திம** ராக ஸ்வரபேதங்களைக் காட்டும்.

எண்	சுத்த மத்திம ராகங்களின் பெயர்.	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	எண்	பிரதி மத்திம ராகங்களின் பெயர்
		ச	சு-ரி	ச-ரி சு·க	ஷ-ரி சா-க	அ-க	சு-ம	பி·ம	ப	சு-த	ச-த சு-நி	ஷ-த கைநி	கா-நி	ச்		
1	கனகாங்கி	ச	ரி	க	...	...	ம	இந்தக் கூண்டில் மாற்றிக்கொள்ளவும்.	ப	த	நி	...	...	ச்	37	சாலகம்
2	ரத்னாங்கி	ச	ரி	க	...	...	ம		ப	த	...	நி	...	ச்	38	ஜலார்ணவம்
3	கானமூர்த்தி	ச	ரி	க	...	...	ம		ப	த	...	...	நி	ச்	39	ஜாலவராளி
4	வனஸ்பதி	ச	ரி	க	...	...	ம		ப	...	த	நி	...	ச்	40	நவநீதம்
5	மானவதி	ச	ரி	க	...	...	ம		ப	...	த	...	நி	ச்	41	பாவனி
6	தானரூபி	ச	ரி	க	...	...	ம		ப	...	...	த	நி	ச்	42	ரகுப்பிரிய
7	சேனாவதி	ச	ரி	...	க	...	ம		ப	த	நி	...	...	ச்	43	கவாம்போதி
8	அனுமத்தோடி	ச	ரி	...	க	...	ம		ப	த	...	நி	...	ச்	44	பவப்பிரிய
9	தேனுக	ச	ரி	...	க	...	ம		ப	த	...	...	நி	ச்	45	சுபபந்துவராளி
10	நாடகப்பிரிய	ச	ரி	...	க	...	ம		ப	...	த	நி	...	ச்	46	சட்விதமாகிணி
11	கோகிலப்பிரிய	ச	ரி	...	க	...	ம		ப	...	த	...	நி	ச்	47	சுவர்ணாங்கி
12	ரூபவதி	ச	ரி	...	க	...	ம		ப	...	...	த	நி	ச்	48	திவ்யமணி
13	காயகப்பிரிய	ச	ரி	...	...	க	ம		ப	த	நி	...	...	ச்	49	தவளாம்பரி
14	வகுளாபரணம்	ச	ரி	...	...	க	ம		ப	த	...	நி	...	ச்	50	நாமநாராயணி
காம்போதி	பக்தியான துதி மகிழ்ச்சி	த	பதசநி
தீரசங்கராபரணம்-மே 29	சாந்தம்	க	
ஆரபி	பக்தி	ம	ரிமத, சரிமத
அம்ஸத்துவனி	பக்தி, அன்பு	ப	கபநி
பிலகரி	உதயசந்தோஷம்	ப	தசநித,
சலநாட—மே 36	தீரம்	க	
சுத்தநாட	கம்பீரம்	க	சகம
மேசகல்யாணி—மே 65	குதூகலம்	க	
அமீறுகல்யாணி	கல்யாணகுதூகலம்	நி	பமபதநி,

விஷயம்-14 விசேஷ வழக்கத்தில் வரும் ராகங்களைப் பாடுவதற்கு உசிதமான காலம்.

வித்வாம்சர்கள், ஒரு நாளாகிய 24 மணி நேரத்தை மும்மூன்று மணிகள் கொண்ட 8 பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு காலப் பிரிவிலும் எந்த எந்த ராகத்தைப் பாடுவது உசிதமென்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த 8-காலங்களாவன:—

1. சூரிய உதயத்திற்கு முன்பு,	அதாவது	3	மணிமுதல்	6	வரையிலும்
2. சூரிய உதயத்திற்குப் பின்பு,	,,	6	,,	9	,,
3. சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு,	,,	3	,,	6	,,
4. சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பு,	,,	6	,,	9	,,
5. நடுப்பகலுக்கு முன்பு,	,,	9	,,	12	,,
6. நடுப்பகலுக்குப் பின்பு,	,,	12	,,	3	,,
7. நடு இரவுக்கு முன்பு,	,,	9	,,	12	,,
8. நடு இரவுக்குப் பின்பு,	,,	12	,,	3	,,

இதன் கீழ் அச்சிடப்பட்ட பதக்கத்தில், விசேஷ வழக்கத்திலி ருக்கின்ற சில ஜன்ய ராகங்களையும், விஷயம் 12-ல் குறிக்கப்பட்ட 9 மேளகர்த்தா ராகங்களையும் பாடுவதற்குத் தகுந்த காலப் பிரிவுகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

சிலர் இன்னொரு நிபந்தனையையும் அனுசரிக்கிறார்கள். அது என்னவென்றால், சாயங்காலத்தில் பாடும் ராகங்களில், க, நி, ஸ்வர ங்களும், காலையில் பாடும் ராகங்களில் ரி, த, ஸ்வரங்களும் வர்ஜித மாயிருக்கக் கூடாது என்பதே.

இன்னும் ஒரு பூர்விக பொது நிபந்தனையுண்டு. அதன் பிரகாரம் ஜாமத்தில் பாட உசிதமான ஆகிரி ஒன்று, விடியற்காலத்தில் பாட உசிதமான இந்தோளம், ராமகவி, பூபாளம் ஆகிய மூன்று, உச்சிக் காலத்தில் பாட உசிதமான சாரங்கம் ஒன்று ஆகிய இவ்வைந்து ராக ங்கள் நீங்கலாகப் பாக்கி நின்ற 27 பூர்வ ராகங்களை அவசியமானால் எல்லாக்காலங்களிலும் பாடலாம்.

சில ராகங்களைப் பாடத்தகுந்த

மேளகர்த்தா ராகங்கள்			ஜன்ய ராகங்கள்	
எண்	ராகத்தின் பெயர்	பாடத்தகுந்த காலம்	பாடத்தகுந்த காலம் சூரிய உதயாதி மணி 6—9	9—12
8	அனுமத்தோடி	காலை	—	தேசி
15	மாயாமாளவகவுள	விடியற் காலம்	மலகரி, ராமக்கிரிய	மேகரஞ்சினி
20	நடபயிரவி	இரவு	பயிரவி, ஆனந்த பயிரவி	—
22	கரஹரப்பிரிய	மத்தியானம்	முகாரி	ஸ்ரீராகம், மத்யமாவதி
28	அரிகாம்போதி	இரவு	ரகுப்தி	நீலாம்பரி
29	தீரசங்காபரணம்	காலை	குறிஞ்சி, பிலகரி	—
36	சலநாட	இரவு	—	—
45	சுபபந்து வராளி	சாயங் காலம்	—	—
65	மேசகல்யாணி	சாயங் காலம்	யமுனகல்யாணி	சாரங்க

காலச் சக்கரம்

ஜன்ய ராகங்கள்

பாடத்தகுந்த காலம் சூரிய உதயாதி மணி		பாடத்தகுந்த காலம்-சூரிய அஸ்தமாதி மணி			
12-3	3-6	6-9	9-12	12-3	3-6
—	தோடி	புன்னாக-வராளி	ஆயிரி, அசாவேரி	—	தன்யாசி, பூபாளம்
பூர்வி, குஜ்ஜரி	நாதநாமக்-கிரிய, வசந்த	சாவேரி, லலித, குண்டக்கிரிய	மங்கள கைசிக, பவுளி	—	கவுரி, மாருவ
—	இந்தூளம்	—	—	—	தேவக்கிரிய
காபி	வுசேனி	மனோகரி	—	மஞ்சரி, கானட	—
மோகனம்	மாளவி, நாராயணி	காம்போதி	பங்காள	சுரடி	—
சங்கராபரணம், அம்ஸத்துவனி	—	பேகட	கேதாரம்	—	தேசாட்சி, தேவகாந்தாரி
—	—	நாட	—	—	—
—	பந்து-வராளி	—	—	—	—
கல்யாணி	—	அமீறு-கல்யாணி	—	—	—

விஷயம்—15. பூர்வீக ராகங்கள்.

தமிழ் நாட்டில் பூர்வீகத்தில் சாதாரண வழக்கத்திலிருந்த ராகங்கள் 32 என்று எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த 32 ராகங்கள், 8 புருஷ ராகங்களாயும், ஒவ்வொரு புருஷ ராகத்திற்கு மும்மூன்று மனைவிகளாக 24 பெண் ராகங்களாயும் பிரிக்கப்பட்டிருந்தன. இந்த 32 ராகங்களும் விஷயம் 14-ல் குறிக்கப்பட்ட ராகங்களாயும் அல்லது அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட மேளகர்த்தாக்களிலிருந்து பிறந்திருப்பதையும் கவனித்தால் அவைகள் அநேகமாய் 8-வது மேளம் அனுமத்தோடியிலும், 15-வது மேளம் மாயாமாளவகவுளத்திலும், 20-வது மேளம் நடபயிரவியிலும், 28-வது மேளம் அரிகாம்போதியிலும், 29-வது மேளம் தீரசங்கராபரணத்திலும் உற்பத்தியாயிருப்பது விளங்கும். அடியில் கண்ட ஜாப்தாவில் இந்த 32 ராகங்களில் ஒவ்வொன்றும் புருஷ ராகமா, பெண் ராகமா வென்றும், சம்பந்தப்பட்ட மேளகர்த்தாக்களின் எண்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

எண்	ராகத்தின் பெயர்		மே எண்	எண்	ராகத்தின் பெயர்		மே எண்
1	பயிரவி	(பு)‖	20	17	வசந்தம்	(பு)	15
2	தேவக்கிரிய	(ம)‡	20	18	ராமக்கிரிய	(ம)	15
3	மேகரஞ்ச	(ம)	15	19	வராளி	(ம)	39
4	குறிஞ்சி	(ம)	29	20	கைசிகம்	(ம)	15
5	பூபாளம்	(பு)	8	21	மாளவி	(பு)	28
6	வேளாவளி	(ம)	23	22	நாராயணி	(ம)	28
7	மலகரி	(ம)	15	23	குண்டக்கிரிய	(ம)	15
8	பௌளி (பவுளி)	(ம)	15	24	குஜ்ஜரி	(ம)	15
9	ஸ்ரீராகம்	(பு)	22	25	பங்காளம்	(பு)	28
10	இந்தாளம்	(ம)	20	26	தன்னியாசி	(ம)	8
11	பல்லதி	(ம)	16	27	காம்போதி	(ம)	28
12	சாவேரி	(ம)	15	28	கௌளி (கவுள)	(ம)	15
13	பலமஞ்சரி	(பு)	22	29	நாட்டை (நாட)	(பு)	36
14	தேசி	(ம)	8	30	தேசாட்சி	(ம)	29
15	இல்லிதை(லலித)	(ம)	15	31	காந்தாரி	(ம)	48
16	தோடி	(ம)	8	32	சாரங்கம்	(ம)	65

குறிப்பு:—‖ (பு) அடையாளம்—புருஷ ராகம்.

‡ (ம) „ —புருஷ ராகத்தின் மனைவி.

விஷயம்-16. பூர்வீக ராகங்களைச் செய்யுளுக்குப் பிரயோகம் செய்யும் முறை.

15-வது விஷயத்தில் சொல்லப்பட்ட 32 ராகங்களில் எவைகள் எந்தச் செய்யுளுக்கு உபயோகிக்கப் படுகின்றனவென்பதை அடியில் குறிக்கப்பட் டிருக்கின்றன.

	செய்யுள்	பிரயோகிக்கப்படும் ராகம்
1	வெண்பா	சங்கராபரணம்
2	அகவல்	தோடி
3	கலி	பந்துவராளி
4	கலித்துறை	பயிரவி
5	தாழிசை	தோடி
6	விருத்தம்	கல்யாணி, காம்போதி. மத்யமாவதி முதலியன
7	உலா	சௌராட்டிரம்
8	தொடை	சௌராட்டிரம், நாட்டை
9	மங்களம்	மங்கள கௌசிகம்
10	தேவாராத்தி	பூபாளம்
11	பிள்ளைக்கவி	கேதாரகௌளம்
12	பரணி	கண்டாரவம்

விஷயம்-17. அதிபூர்வ பண் ராகங்கள்.

63 நாயன்மார்களில் சிறப்புற்றோங்கிய சைவசமயாசாரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்று திருநாமங்களைப் பூண்டவர்களின் தேவாரப்பண்கள் பின்கண்ட ராகங்களில் பாடப்பட்டுள்ளன.

1. கொல்லி
2. கொல்லிகௌவாணம்
3. காந்தாரம்
4. பியந்தை காந்தாரம்
5. குறிஞ்சி
6. வியாழக்குறிஞ்சி
7. அந்தாளக்குறிஞ்சி
8. மேகராகக்குறிஞ்சி
9. பஞ்சமம்
10. பழம் பஞ்சரம்
11. காந்தாரபஞ்சமம்.
12. நட்டபாஷை
13. தக்க ராகம்
14. பழந்தக்கராகம்
15. இந்தளம்
16. சீகாமரம்

17. சாதாரி
18. புறநீர்மை
19. தக்கேசி
20. கவுசிகம்
21. செவ்வழி
22. செந்துருத்தி
23. நட்ட

மேலே சொல்லப்பட்ட 23 பண் ராகங்களில் குறிஞ்சி, பஞ்சமம், இந்தூளம், நாட்டை முதலிய சில ராகங்கள் தற்காலத்திய ஜன்ய ராகங்களின் பெயர்களாயிருக்கின்றன. ஆனால் மற்ற ராகங்கள் எந்த மேள கர்த்தாக்களிலிருந்து பிறந்தவைகள் என்றும், அவைகளின் ஆரோகண, அவரோகண ஸ்வரங்கள் இன்னவை யென்றும் விளங்கவில்லை. தவிர பண்கள், பூர்வகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட ராகங்களால் தற்காலத்தில் பாடப்படுவதாயும் தெரியவில்லை. பண்டைக் காலத்திய பண் ராகங்களைப்பற்றி நாம் கற்றுக்கொள்ள தென்தேசத்திலுள்ள மடாதிபர்களிடமுள்ள நூலாராய்ச்சி அவசியமாயிருக்கிறது.

விஷயம்—18. சில ராகங்களின் பண்டைக்காலத்திய பெருமை.

சாரங்க, கல்யாணி ராகங்கள் மிருகங்கள் தங்களை மறக்கச் செய்யும் என்றும்,

நாகவராளி, புன்னாகத்தோடி ராகங்கள் சர்ப்பங்களை வசீகரிக்குமென்றும்,

மேகரஞ்சனி மேகத்திலிருந்து மழையை இழுக்கு மென்றும்,
தீபிக அவிழ்ந்த விளக்குகளை ஏற்றுவிக்கு மென்றும்,
குண்டக்கிரிய கற்பாறைகளை உருக்குமென்றும்,
சேதாரம் கஷ்டத்தை கொடுக்குமென்றும்.

ஆயிரி சாப்பாட்டுக்குத்திண்டாடச் செய்யுமென்றும், பூர்வநூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

விஷயம்—19, ஆலாபம்.

ஆலாபம் என்பது பாட்டிற்கு ஏற்படுத்தப்பட்ட ஸ்வரங்களல்ல. எதுகை, மோனைகளை யுடைய ஸ்வரத் தொகுதிகளுமல்ல. ஆனல் அது குறித்த ராகத்தின் லட்சணங்களை விஸ்தரித்து, அதன் அழகையும், ரஞ்சகத்தையும் பிரகாசமாய் எடுத்துக்காட்ட, அந்த ராகத்திற்கு ஏற்பட்டுள்ள ஸ்வரத் தொகுதிகளை வெவ்வேறு விதமாய்ப் பிரித்தும் அடுக்கியும் பாடுதலே.

அத்தியாயம் IV

தாளம்

பிரிவு I

தாளஞானம்

விஷயம்—1. அர்த்தம்.

தாளம் என்னும் பதத்திற்குச் சாதாரண அர்த்தம் ஒரு கையுடன் மற்றொரு கையைத் தட்டுதல் என்று சொல்லுவார்கள். இப்படித் தட்டுவதினால் உண்டாகும் சப்தத்தைச் சிலவித்வான்கள் கண்ணிமைப் பொழுதென்றும், கைநொடிப் பொழுதென்றும் செப்பி யிருக்கிறார்கள். பொதுவில் இது ஒரு குறில் அக்ஷர காலம் என்று போதிக்கப் படுகிறது. இது, காலகதியில் கால் ($\frac{1}{4}$) மாத்திரை அல்லது அனுத்ருதம் என்று சங்கீதநூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் தாளம் என்னும் பதத்தின் சரியான அர்த்தம் பாட்டின் ஒரு ஆவர்த்தத்தின் பிரமாணம். இக்தப் பிரமாணம் பாட்டிற்குத் தக்கபடி பலவிதமாயும் பலகால அளவுகளை யுடையனவாயு மிருப்பதால் அநேகவித தாளங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சில நூல்களில் தாளங்கள் 120 வகைகளிருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள். ஆனால் முக்கியமான தாளங்கள் 35. இவைகளின் குணங்களைப்பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு முன், மாத்திரை என்பது என்னவென்றும், ஆவர்த்தம் என்பது என்னவென்றும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

விஷயம்—2. மாத்திரையின் கால அளவு.

4 குறில்களை (ச, ரி, க, ம,) என்று சேர்த்து உச்சரிக்கப் பிடிக்கும் காலம் ஒரு மாத்திரை என்று சொல்லப்படும். இந்தக் கணக்கின்படி பின்கண்ட மாத்திரை அளவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

அவையாவன :—

1. 1 குறில் அக்ஷரகாலம், $\frac{1}{4}$ மாத்திரை அல்லது அனுத்ருதம்
   (உ-ம்) ச, ரி, க, ம.
2. 2 குறில் அக்ஷரகாலம், $\frac{1}{2}$ மாத்திரை அல்லது த்ருதம்
   (உ-ம்) சரி, கம, பத, நிச.

3. 4 குறில் அக்ஷரகாலம், 1 மாத்திரை அல்லது லகு
(உ-ம்) சரிகம, பதநிச, சநிதப, மகரிச.
4. 8 குறில் அக்ஷரகாலம், 2 மாத்திரை அல்லது குரு
(உ-ம்) சரிகமபதநிச, சநிதபமகரிச.
5. 12 குறில் அக்ஷரகாலம், 3 மாத்திரை அல்லது புளுதம்
6. 16 குறில் அக்ஷரகாலம், 4 மாத்திரை அல்லது காகபாதம்.

விஷயம்—3. விளம்பித, தீவிர கால மாத்திரைக் கணக்கு.

மேலே சொல்லப்பட்ட மாத்திரைக் கணக்கு விளம்பித காலத்தில் அதாவது தாமதமாய்ப் பாடி அதற்குத்தக்கபடி தாளம் போடுவதற்கு அமையும்.

ஆனால் தீவிர அல்லது துரிதகாலத்திற் பாடி அதற்குத் தக்கபடி தாளம் போட்டால் 2-குறில்கள் $\frac{1}{4}$-மாத்திரையும், 4-குறில்கள் $\frac{1}{2}$-மாத்திரையும், 8-குறில்கள் ஒரு மாத்திரையுமாகும். இப்படிப் பாடித் தாளம் போடுவது பிரதிலோப மார்க்கம் என்று சொல்லப்படும். இந்தக் காலங்களுக்கு இந்த நூலில் காட்டப்படும் அடையாளங்கள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

(1) விளம்பித காலத்திற்கு—அடையாளமில்லை; (உ-ம்) சரிகம.
(2) தீவிரகாலத்திற்கு—ஸ்வரங்களுக்குமேல் ஒத்தை நீளக்கோடு; (உ-ம்) சரிகம.
(3) அதிதீவிர காலத்திற்கு—ஸ்வரங்களுக்குமேல் இரட்டை நீளக்கோடு; (உ-ம்) சரிகம.

விஷயம்—4. பாட்டு

பாட்டு என்றால் இன்னதென்றும், பாட்டுக்கும் தாளத்திற்கும் என்ன சம்பந்தம் என்றும் தெரிந்துகொள்வதற்கு முன், ஆவர்த்தம் என்னவென்று நாம் விசாரிப்பது அவசியம். ஏனென்றால் பாட்டு ஆவர்த்தங்களால் ஆனது. பாட்டு என்பது பொதுப் பதம். இது கீதம், வர்ணம், கீர்த்தனை, ஜாவளி, பண், டப்பா முதலிய இன்னிசையைத் தரக்கூடிய ஸ்வரங்களின் அடுக்குகள். சாதாரணமாய் ஒவ்வொரு பாட்டிற்கும், பல்லவி, அநுபல்லவி,

சரணம் என்கிற 3-பிரிவுகளுண்டு. சில பாட்டுகளுக்கு இரண்டு பிரிவுகள் மாத்திரமிருக்கும். அதாவது பல்லவியும் அனுபல்லவியும் அல்லது பல்லவியும் சரணமு மாத்திர மிருக்கும்.

விஷயம்--5, ஆவர்த்தம்

மேலே விவரிக்கப்பட்ட பல்லவி, அனுபல்லவி, சரணம் இவைகளில் ஒவ்வொன்றும் ஒன்று அல்லது பல ஆவர்த்தங்களாலானது என்று மாணவர்கள் தெளிவாய்த் தெரிந்துக்கொள்ள வேண்டும். எப்படி பல்லவி முதலிய பாட்டின் பாகங்கள் ஒவ்வொன்றும் ஆவர்த்தங்களால் உண்டாக்கப்பட்டனவோ அப்படியே ஆவர்த்தங்கள், விபாகங்களால் உண்டாக்கப்பட் டிருக்கின்றன. விபாகங்கள், அங்கங்களினால் உண்டாக்கப்பட் டிருக்கின்றன. ஆகையினால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது:—

1. பாட்டின் பாகங்கள்—பல்லவி, அனுபல்லவி, சரணம்.
2. பல்லவி முதலிய பிரிவுகளின் பாகங்கள்—ஆவர்த்தங்கள்.
3. ஆவர்த்தத்தின் பாகங்கள்—விபாகங்கள்.
4. விபாகத்தின் பாகங்கள்—அங்கங்கள்.

முதலாவது, பல்லவியின் பாகங்கள் ஆவர்த்தங்கள் என்பதற்கு ஆதி தாளத்தில் உதாரணம்:—

பல்லவி—1. சகாரிகம்பம | பாதா | பாதப ||
2. மகமாமகரீ | கரிசா | ரிகமாகரிசா ||

இந்தப் பல்லவியில் இரண்டு ஆவர்த்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆவர்த்தத்திலும் 3-விபாகங்க ளிருக்கின்றன. விபாகங்களுக்கு மத்தியில் ஒரு குறுக்குக் கோடு (|) இடப்பட்டிருக்கிறது. ஆவர்த்த முடிவில் இரண்டு குறுக்குக் கோடுகள் (||) இடப்பட்டிருக்கின்றன. இன்னும், ஒவ்வொரு ஆவர்த்தத்திலும் 16-குறில்களிருக்கின்றன வென்பதை இதன்கீழ் பிரித்து காட்டப்பட் டிருக்கிறது.

சகஅரிகமபம | பஅதஅ | பஅதப ||
மகமஅமகரிஇ | கரிசஅ | ரிகமஅகரிசஅ ||

இரண்டாவது ஆவர்த்தத்தின் கடைசி விபாகத்தில் 8-குறில்களிருந்தாலும் அது தீவிர காலத்திலிருப்பதால் அவைகள் 4-குறில்களுககுத்தான் சமானம். தீவிர காலமென்பதைக் காட்ட எழுத்துக்

களுக்குமேல் நீளக்கோடு (——) போடப்பட்டிருப்பதையும் கவனிக்கவும்.

விஷயம்—6. விபாகம்

ஒவ்வொரு ஆவர்த்தமும் தாள ஜாதிக்குத் தக்கபடி ஒன்று முதல் நான்கு விபாகங்களை உடையதாயிருக்கும். மேலே காட்டிய உதாரணத்தில் மும்மூன்று விபாகங்களிருக்கின்றனவென்று சொல்லப்பட்டது. அவையாவன:—

முதல் விபாகம்—சகாரிகமபம, இதில் 8-குறில்களிருக்கின்றன.
இரண்டாவது விபாகம்—பாதா, ,, 4 ,, ,,
மூன்றுவது விபாகம்—பாதப, ,, 4 ,, ,,

இவ்விதமாகவே இரண்டாவது ஆவர்த்தத்தையும் பிரித்துப் பார்க்கவும்.

விஷயம்—7. அங்கம்

ஒவ்வொரு விபாகமும், அது ஆவர்த்தத்தின் முதல், நடு, கடை எங்கிருந்தாலும் தாளத்திற்குத் தக்கபடி 1, 2, 3, 4, 5, 7 அல்லது 9-அங்கங்களை யுடையதாயிருக்கும். 6 அல்லது 8 எண்ணிக்கைகளையுடைய அங்கங்களை யுடைய விபாகங்கள் 35 தாளங்களிலு மில்லை.

விஷயம் 4-ல் காட்டப்பட்ட உதாரணத்தில், இரண்டு ஆவர்த்தங்களிலும் முறையே முதல் விபாகத்தில் 4 அங்கங்களும், இரண்டாவது விபாகத்தில் 2 அங்கங்களும், மூன்றுவது விபாகத்திலும் 2 அங்கங்களுமிருக்கின்றன. இதில் ஒவ்வொரு அங்கமும் இரண்டு குறில்களாலானது.

1-வது ஆவர்த்தம்-முதல் விபாகம். சகாரிகமபம என்பதில்
சக+அரி+கம+பம. என்கிற 4 அங்கங்கள்,
,, ,, இரண்டாவது விபாகம். பாதா என்பதில்
பஅ+தஅ. என்பது 2 அங்கங்கள்,
,, ,, மூன்றுவது விபாகம். பாதப என்பதில்
பஅ+தப என்பது 2 அங்கங்கள்.

2-வது ஆவர்த்தம் - மூன்றுவது விபாகம்-ரிகமாகரிசா என்பதிலும் 2. அங்கங்கள் தானிருக்கின்றன. தீவிர காலததிலிருப்பதால்

ஒரு அங்கத்திற்கு 2 குறில்களுக்குப் பதிலாக 4 குறில்களிருக்கின்றன.

அவையாவன:—ரிகமஅ + கரிசஅ.

விஷயம்-8. அங்க அக்ஷரங்கள்.

ஒவ்வொரு அங்கத்திலும் 1, 2, 4, 8, அல்லது 16 குறில்களிருக்கலாம். ஒரு அங்கத்திற்கு

1	குறிலையுடைய பாட்டை,		சவுக்க	காலப்பாட்டு	என்றும்,
2	குறில்களையுடைய	பாட்டை,	மத்திம	,,	,,
4	,,	,,	த்ரி	,,	,,
8	,,	,,	துர	,,	,,
16	,,	,,	அதிதுர	,,	,,

சொல்லுவார்கள். சவுக்க காலம் தவிர மற்ற 4 காலங்களிற் பாடித் தாளம் போடுவதை அனுலோப மார்க்கம் என்று பேசுவார்கள். மகா வித்வான்கள் தான் அதிதுரத்தில் பாட முடியும். விசேஷமாய் கீர்த்தனைகள் முதலிய பாட்டுகள் சவுக்கம், மத்தியம், த்ரி காலங்களிலேயே பாடப்பட்டிருக்கின்றன. முன் காட்டிய உதாரணத்தில் ஒவ்வொரு அங்கத்திலும் 2 குறில்களும், தீவிர காலத்தில் 4 குறில்களுமிருப்பதைக் கவனிக்கவும்.

ஒரு குறிலையுடைய அங்கங்களுக்கு உதாரணம்.

மப	தசசரி ||
ரிச	தபமப ||

இதில் 1 அங்கத்திற்கு 1 குறில் தான். ஆவர்த்தம இரண்டு விபாகங்களை உடையது. முதல் விபாகத்தில் 2 அங்கங்களும், இரண்டாவது விபாகத்தில் 4 அங்கங்களுமிருக்கின்றன. இதற்கு ரூபக தாளம் என்று பெயர்.

நான்கு குறில்களையுடைய அங்கங்களுக்கு உதாரணம்.

சாசச + நிதபத + நிநிதப + மகமநி | நிதபம + கரிசரி | சமபக + மபதநி ||

இது ஆதி தாளம். மூன்று விபாகங்களை யுடையது. முதல் விபாகத்தில் 4 அங்கங்களும், இரண்டாவது, மூன்றாவது விபாகங்கள் ஒவ்வொன்றிலும் 2 அங்கங்களுமிருக்கின்றன. உதாரணத்தில் முதல் விபாகத்தில், 16 குறில்களும், இரண்டு மூன்றாவது விபாகங்கள் ஒவ்வொன்றிலும் 8 குறில்களுமிருப்பதாலும், ஒரு அங்கம் 4 குறில் அக்ஷரகாலமானதாலும், முதல் விபாகத்தில் 4 அங்கங்களும், இரண்

டாவது விபாகத்தில் 2 அங்கங்களும், மூன்றுவது விபாகத்திலும் 2 அங்கங்களிருக்கின்றன என்று சொல்லப்படும்.

விஷயம்-9. அங்கங்களின் மாத்திரைக்கணக்கு.

அனுலோப மார்க்கத்தில் 4 குறில்கள் ஒரு மாத்திரை யென்றும், ஒரு அங்கத்தில் சாதாரணமாய் 1, 2 அல்லது 4 குறில்களிலிருக்கு மென்றும், பிரதிலோப மார்க்கம் தீவிரகாலத்தில் 8 குறில்கள் ஒரு மாத்திரை யென்றும் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளன.

ஆகையினுல் அனுலோப மார்க்கத்தில்,

சவுக்ககால	அங்கம் 1-க்கு,	குறில் 1,	மாத்திரை $\frac{1}{4}$;
மத்தியமகால	,,	குறில்கள் 2,	,, $\frac{1}{2}$;
த்ரிகால	,,	,, 4,	,, 1.

ஆனல் பிரதிலோப மார்க்கத் தீவிரத்தில்,

உதாரணங்கள்:—

சவுக்ககாலப் பாட்டின்	அங்கம்	1-க்கு,	குறில்கள் 2,	மாத்திரை	$\frac{1}{4}$;
மத்தியமகால	,, ,,	1 க்கு,	,, 4,	,,	$\frac{1}{2}$;
த்ரிகால	,, ,,	1 க்கு,	,, 8,	,,	1.

சவுக்க காலத்தில், 6 அங்கங்களால் அமைக்கப்பட்ட ஆவர்த்த

1 2 | 3 4 5 6 ||

மாகிய, ம ப | த ச் ச ரி || என்பதற்குத்தாள காலம் $1\frac{1}{2}$ மாத்திரை.

மத்தியம காலத்தில் 8 அங்கங்களால் அமைக்கப்பட்ட ஆவர்த்த மாகிய

1 2 3 4 | 5 6 | 7 8 ||

சக+அரி+கம+பம | பா+தா | பா+தப || என்பதற்குத் தாள காலம் 4 மாத்திரை.

த்ரி காலத்தில் 8 அங்கங்களால் அமைக்கப்பட்ட ஆவர்த்த மாகிய

1 2 3 4 | 5 6 | 7

சாசச+நிதபத+நிநிதப+மகமநி | நிதபப+கரிசரி | கமபக+

8 ||

மபதநி ||

என்பதற்குத்தாள காலம் 8 மாத்திரை.

விஷயம்-10. தாளம் போடப்படும் மூன்று விதங்கள்.

நம்முடைய வலது உள்ளங்கையால் இடது உள்ளங்கையின் பேரிலாகிலும், வலது துடையின் பேரிலாகிலும், மற்ற எதின் பேரிலாகிலும் தட்டுவதினால் தாளம் உண்டாகும். இதற்குக் காதையென்று பெயர். சாதாரணமாய் நம்முடைய இடது உள்ளங்கையை ஆகாய மார்க்கமாய் வைத்துக்கொண்டு வலது கையின் உள்ளங்கையால் ஒரு தட்டுதல் மாத்திரம் செய்தல் ஒரு விதம். இந்தநூலில் அதற்குத் தட்டுதல் என்று பெயரும். = என்று அடையாளமு மிடப்படும்.

தட்டினபிறகு வலது உள்ளங்கையை யெடுத்துத் திருப்புவது இரண்டாவது விதம், இந்தநூலில் அதற்குத் தட்டினபின் தள்ளுதல் என்று பெயரும், || என்று அடையாளமு மிடப்படும்.

தட்டின பிறகு வலது உள்ளங்கையை யெடுக்காமல் இடது உள்ளங்கையின் பேரில் வலது கைச்சுண்டு விரல் முதல் மற்ற விரல்களை எடுத்து விட்டுத் தாளக் கணக்கின்படி 2, 3, 4, 6, 8 விரல்களைச் சுண்டு விரல் முதற்கொண்டு வைத்து ஒவ்வொரு விரலால் எண்ணிக்கை செய்தல் மூன்றாவது விதம் இந்நூலில் அதற்குத் தட்டி எண்ணுதல் என்று பெயரும் அங்கசங்கைக்குத் தக்கபடி முறையே ±3 ±4, ±5, ±7, ±9 என்று அடையாளங்களு மிடப்படும்.

விஷயம்-11. தாளமாத்திரை காலம்.

தட்டுதல், தட்டின பின் திருப்புதல், தட்டின பின் எண்ணுதல் என்று சொல்லப்படும் ஒவ்வொன்றும் ஆவர்த்தத்தின் ஒவ்வொரு அங்கம் இந்த அங்கத்தை சவுக்க, மத்தியம், த்ரி, தீவிர காலத்தில் பிரிவு-1, விஷயம்-9-ல் சொல்லப்பட்ட மாத்திரை காலக் கணக்கின்படி முறையே தட்டுதல் மாத்திரமும், திருப்புதல் மாத்திரமும், ஒவ்வொரு இலக்கத்தை எண்ணுவது மாத்திரமும் செய்யப்படவேண்டும்.

பிரிவு II

35. தாளங்கள்.

ஏழு ஆதார தாளங்களுடன் ஐந்து தாள ஜாதிகள் ஒன்றுடன் மற்றொன்று கலப்பதினால் 7×5=35 தாளங்கள் கிரமமாய் உற்பத்தியாகின்றன.

விஷயம்-1. ஆதார தாளங்கள்.

ஆதார தாளங்கள் ஏழு. அவையாவன. 1. த்ருவம், 2. மட்யம், 3. ரூபகம், 4. ஜம்பை, 5. திரிபுடை, 6. அடம், 7, ஏகம்.

ஒரு ஆவர்த்தத்தில் எத்தனை முறை தட்டி எண்ணுதலும், எத்தனை முறை தட்டித்தள்ளுதலும் பிரயோகமாகின்றனவோ அந்தக் கணக்கை அனுசரித்து ஏழு தாளங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன

1. 4 விபாகங்களை யுடைய த்குவதாளம்.

3 தட்டி எண்ணுதல் விபாகங்களையும், 1 தட்டித் தள்ளுதல் விபாகத்தையு முடையது.

2. 4 விபாகங்களையுடைய அடதாளம்.

2 தட்டி எண்ணுதல் விபாகங்களையும், **2** தட்டித்தள்ளுதல் விபாகங்களையு முடையது.

3. 3 விபாகங்களையுடைய மட்யதாளம்.

2 தட்டி எண்ணுதல் விபாகங்களையும், 1 தட்டித்தள்ளுதல் விபாகத்தையு முடையது.

4. 3 விபாகங்களையுடைய திரிபுடை தாளம்.

1 தட்டி எண்ணுதல் விபாகத்தையும், 2 தட்டித்தள்ளுதல் விபாகங்களையு முடையது.

5. 3 விபாகங்களையுடைய ஜம்பை தாளம்.

1 தட்டி எண்ணுதல் விபாகத்தையும், 1 தட்டித்தள்ளுதல் விபாகத்தையும், 1 தட்டுதல் மாத்திரம் விபாகத்தையு முடையது. இந்த ஒரு ஆதார தாளத்தில் தான் தட்டுதல் மாத்திரம் என்னும் விபாகம் பிரயோகமாகிறது.

6. 2 விபாகங்களையுடைய ரூபகதாளம்.

1 தட்டி எண்ணுதல் விபாகத்தையும், 1 தட்டித்தள்ளுதல் விபாகத்தையு முடையது. இந்த ஒரு ஆதார தாளத்தில் தான் தட்டி எண்ணுதல் விபாகம் முதல் விபாகமாய் வராமல் பிந்தி வருகிறது.

7. 1 விபாகத்தை மாத்திர முடைய ஏகதாளம்.

1 தட்டி எண்ணுதல் விபாகத்தை மாத்திர முடையது.

விஷயம்-2. தாள ஜாதிகள்.

தாள ஜாதிகள் ஐந்து. இவை ஐந்தும் தட்டி எண்ணுதல் விபாகத்தின் அங்கசங்கையை அனுசரித்து ஐந்து ஜாதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன.

3	அங்கங்களமைந்த	தட்டி எண்ணுதல்	விபாகங்களையுடைய தாளம்	திச்ரம்
4	,,	,,	,,	சதுச்ரம்
5	,,	,,	,,	கண்டம்
7	,,	,,	,,	மிச்ரம்
9	,,	,,	,,	சங்கீர்ணம்

விஷயம்-3. தாள விபாக அங்கங்களை எண்ணும் விதம்.

1. திச்ரதாள விபாகத்தைத் தட்டுவதுடன் சுண்டு விரல், மோதிர விரல் இவைகளால் எண்ணினால், தட்டுடன் 3 அங்கங்களாகின்றன. இதற்கு அடையாளம், ± 2 3.

2. சதுச்ர தாள விபாகத்தைத் தட்டுவதுடன் சுண்டு விரல், மோதிரவிரல், நடுவிரல் இவைகளால் எண்ண வேண்டும். தட்டுடன் 4 அங்கங்களாகும். இதற்கு அடையாளம், ± 2 3 4.

3. கண்டதாள விபாகத்தைத் தட்டுவதுடன் சுண்டு விரல், மோதிரவிரல், நடுவிரல், ஆள்காட்டி விரல், இவைகளால் எண்ணவேண்டும். தட்டுடன் 5 அங்கங்களாகும். இதற்கு அடையாளம், ± 2 3 4 5.

4. மிச்ரதாள விபாகத்தைத் தட்டுவதுடன் சுண்டுவிரல் முதல் கட்டை விரல் வரையிலும், மறுபடியும் சுண்டுவிரலாலும் எண்ண வேண்டும். அப்பொழுது தட்டுவதுடன் 7 அங்கங்களாகும். இதற்கு அடையாளம், ± 2 3 4 5 7.

5. சங்கீர்ண தாள விபாகத்தைத் தட்டுவதுடன் சுண்டு விரல் முதல் கட்டை விரல் வரையிலும், மறுபடியும் சுண்டு விரல், மோதிர விரல், நடுவிரல் இவைகளால் எண்ண வேண்டும். அப்படி எண்ணினால் தட்டுடன் 9 அங்கங்களாகும். இதற்கு அடையாளம், ±23456789.

விஷயம்-4. தாளங்களில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள்.

1. ஆவர்த்தத்தின் ஒவ்வொரு விபாகத்தையும், அது எத்தனை அங்கங்களை யுடையதாயிருந்தாலும், தட்டுதலிலாலேயே ஆரம்பிக்க வேண்டும.

2. விபாகத்தில் ஒரு அங்கமாத்திரமிருந்தால் தட்டுதல் மாத்திரம் செய்தல் வேண்டும். விபாகத்தில் இரண்டு அங்கங்களிருந்தால் முதல் அங்கத்தைத் தட்டியும், இரண்டாவது அங்கத்தைத் தள்ளியும் காட்ட வேண்டும். விபாகத்தில் இரண்டுக்கு மேற்பட்ட அங்கங்களிருந்தால் முதல் அங்கத்தைத் தட்டியும் மீதி நிற்கும் அங்கங்களை விஷயம் 3-ல் குறித்தபடி எண்ணியும் காட்டவேண்டும்.

3. ஒரே விபாகத்தையுடைய ஏகதாளத்தில், 5 ஜாதியிலும் தட்டி எண்ணுதல் தவிர மற்ற இரண்டு கிரிகைகளும் அவசியமிராது.

4. ஜம்பை தாளத்தின் 5 ஜாதிகளிலு மாத்திரம் ஒரு அங்கத்தையுடைய தட்டுதல் மாத்திரம் என்று பேசப்பட்ட விபாகம் வரும். மற்ற 30 ஜாதிதாளங்களிலும் அது வராது.

5. ரூபகத்தைச் சேர்ந்த 5 ஜாதிகளில் மாத்திரம் தட்டித்தள்ளுதல் என்னும் விபாகம் முதல் விபாகமாய் வரும். மற்ற 30 ஜாதி தாளங்களிலும் அது ஆவர்த்தத்தின் இடையிலும், கடையிலும் வரும்.

6. சில சமயங்களில், தாளத்தின் விபாக வரிசையை மாற்றியும் தாளம் போடுவது வழக்கத்திலிருக்கிறது. உதாரணமாக 4 விபாகங்களையும், அவைகளில் இரண்டு அங்கங்களையுடைய விபாகத்தை இரண்டாவது விபாகமாகவு முடைய சதுர்ச த்ருவதாளத்தில், இரண்டு அங்கங்களையுடைய விபாகத்தை முதல், மூன்றாவது, அல்லது நான்காவது விபாகமாகவும் தாளம் போடலாம்.

விஷயம்-5. தாளக்கிரமம்.

தாளக்கிரமம் நான்கு வகைப்படும். அவையாவன:—

1. அதீதம்-பாட்டு முன்னும், தாளம் பின்னும் வருவது.
2. அநாகதம்-தாளம் முன்னும், பாட்டு பின்னும் வருவது.
3. விஷமம்-பாட்டும், தாளமும் முன்னும், பின்னும் கலந்து வருவது.
4. சமம்-பாட்டும், தாளமும் ஒத்து வருவது.

விஷயம்-6. விஶ்ரமகாலம்.

பாட்டும், தாளமும் ஒத்து வருவதுதான் ஒழுங்கு. ஆகையினால் அதை சமம் என்று சொல்லப்பட்டது. ஆனால் சில பாட்டுகளினுடைய பல்லவியின் முதல் ஆவர்த்தம் ஆரம்பிப்பதற்கு முந்தியே ஆவர்த்தத்தின் முதல் விபாகத்தின் அங்கங்களில் சில அங்கங்களை தாளம் போட்ட பிற்பாடு, பாட்டை ஆரம்பிப்பார்கள். இதைத்தான விஸரம்காலம் என்று சொல்லப்படும். இது முதலில் அநாகதமானாலும் பிறகு பாட்டு முடியும் வரையிலும் பாட்டும், தாளமும் ஒத்து சமமாகவரும். இதை ஆதிதாளத்தில் விசேஷமாய்க் காணலாம்.

ஷயம்-7. தாளப்பதக்கம்.

ஏழு ஆதாரதாளங்களிலும் விபாகங்கள் கலக்கின்ற மாதிரியும், 35 ஜாதி தாளங்களில் உள்ள விபாங்களின் லட்சணமும், ஒவ்வொரு விபாகத்தின் அங்க சங்கையும் மாணவர்கள் எளிதில் தெரிந்துக் கொள்ளும் படியாக அடுத்த பக்கத்திலுள்ள பதக்கத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

---

35 தாள லட்சணங்

		7-ஆதார தாளங்கள்		35-வித தாளங்கள்			
		தாள விபாகங்களின்		சதுர்சஜாதி		திச்ரஜாதி	
எண்	பெயர்	அடையாளங்கள்	சங்கை	விபாக அங்கங்களின் சங்கை	மொத்த அங்க சங்கை	விபாக அங்கங்களின் சங்கை	மொத்த அங்க சங்கை
1	த்ருவம்	± | = ‖ | ± | ± ‖	4	4 |2 |4 |4‖	14	3 |2 |3 |3‖	11
2	மட்யம்	± | = ‖ | ± ‖	3	4 |2 |4‖	10	3 |2 |3‖	8
3	ரூபகம்	= ‖ | ± ‖	2	2 |4‖	6	2 |3‖	5
4	ஜம்பை	± | = | = ‖ ‖	3	4 |1 |2‖	7	3 |1 |2‖	6
5	திரிபுடை	± | = ‖ | = ‖ ‖	3	4 |2 |2‖	8	3 |2 |2‖	7
6	அடம்	± | ± | = ‖ | = ‖ ‖	4	4 |4 |2 |2‖	12	3 |3 |2 |2‖	10
7	ஏகம்	± ‖	1	4‖	4	3‖	3

தாள அடை ± எண்ணுவதற்குமுன் போடப்படும் தட்டு(ஒரு அங்கம்)

யாளங்கள் :— = தட்டுதல் மாத்திரம்-(ஒரு அங்கம்)

‖ தட்டித் தள்ளுதல்மாத்திரம்-(ஒரு அங்கம்)

= ‖ தட்டித் தள்ளுதல்-(இரண்டு அங்கங்கள்)

| தாள விபாகங்களின் பிரிவு

‖ தாளம் அல்லது ஆவர்த்தத்தின் முடிவு.

கவிளக் காட்டும் பதக்கம்.

35-வித தாளங்கள்					
மிச்ரஜாதி		கண்டஜாதி		சங்கீரணஜாதி	
விபாக அங்கங் களின் சங்கை	மொத்த அக்ஷரம்	விபாக அங்கங் களின் சங்கை	மொத்த அக்ஷரம்	விபாக அங்கங் களின் சங்கை	மொத்த அக்ஷரம்
7 | 2 | 7 | 7 ‖	23	5 | 2 | 5 | 5 |	17	9 | 2 | 9 | 9 ‖	29
7 | 2 | 7 ‖	16	5 | 2 | 5 ‖	12	9 | 2 | 9 ‖	20
2 | 7 ‖	9	2 | 5 ‖	7	2 | 9 ‖	11
7 | 1 | 2 ‖	10	5 | 1 | 2 ‖	8	9 | 1 | 2 ‖	12
7 | 2 | 2 ‖	11	5 | 2 | 2 ‖	9	9 | 2 | 2 ‖	13
7 | 7 | 2 | 2 ‖	18	5 | 5 | 2 | 2 ‖	14	9 | 9 | 2 | 2 ‖	22
7 ‖	7	5 ‖	5	9 ‖	9

விஷயம்-8. அதிக பழக்கத்திலுள்ள தாளங்கள்.

இந்தப்பிரிவில் விவரமாய்ச் சொல்லப்பட்ட 35 தாளங்களில் அதிகமாய் பழக்கத்தில் வருகிற தாளங்கள் 7. இந்த ஏழுதாளங்களுக்கு ஜாதிகளைக் குறிக்காமலே சம்பந்தப்பட்ட ஆதாரதாளங்களின் பெயர்களே வழக்கத்தில் உபயோகப் படுத்தப்படுகின்றன.

அவையாவன்:—

1. த்ருவம். இது 4 விபாகங்களையும் 14 அங்கங்களையு முடைய சதுச்ர த்ருவ தாளம்

2. மட்டியம். இது	3	,,	10	,,	சதுச்ர மட்டியம்
3. ரூபகம். இது	2	,,	6	,,	சதுச்ர ரூபகம்
4. ஜம்பை. இது	3	,,	10	,,	மிச்ர ஜம்பை
5. த்ருபுடை. இது	3	,,	7	,,	திச்ரத்ருபுடை
6. ஆதிதாளம் இது	3	,,	8	,,	சதுச்ர த்ருபுடை
7. அடதாளம். இது	4	,,	14	,,	கண்டஅடதாளம்

விஷயம்-9. மேலே சொல்லப்பட்ட ஏழுதாளங்களின் ஆவர்த்தப் பிரிவுகளும், தாள அடையாளங்களும்; உதாரணங்களும்.

1. த்ருவம். ± 2 3 4 | = ‖ | ± 2 3 4 | ± 2 3 4‖
மமபா | பா | நிபநிநி | சாசா ‖14 அங்கங்கள்,

2. மட்டியம். ± 2 3 4 | = ‖ | ± 2 3 4‖
சரிகரி | சரி | சரிகம‖—10 அங்கங்கள்,

3. ரூபகம். = ‖ | ± 2 3 4‖ = ‖ | ± 2 3 4‖
மப | தசசரி‖ ரிச | தபமப‖-6 அங்கங்கள்,

4. ஜம்பை. ± 2 3 4 5 6 7 | = | = ‖ ‖
சரிகசரிசரி | க | மா ‖-10 அங்கங்கள்,

5. த்ருபுடை. ± 2 3 | = ‖ | = ‖ ‖
தசச | தப | மப ‖-7 அங்கங்கள்,

6. ஆதிதாளம். ± 2 3 4 | = ‖ | = ‖ ‖
நிசநிச | சா | நிச ‖-8 அங்கங்கள்,

7. அடதாளம். ± $\frac{2}{3}$ 4 5 | ± 2 $\frac{3}{4}$ 5 | = ‖ | = ‖ ‖
சரீகா | சாரீக | மா | மா ‖-14 அங்கங்கள்.

குறிப்பு. த்ருவதாளத்தை 4 விபாகம் செய்யாமல் 3 விபாகமாய்த் தாளம் போடுகிற வழக்கமு முண்டு.

உதாரணம்:- ± 2 3 4 5 6 | ± 2 3 4 | ± 2 3 4 ‖
மமபாபா | நிபநிநி | சாசா ‖-14 அங்கங்கள்

பிரிவு—IV

35 தாளங்களில் சேராத தாளங்கள்.

விஷயம்-1. சாப்பு தாளம்.

இது வரையில் விவரிக்கப்பட்ட 35 தாளங்களைத் தவிர கிரமமில்லாத இன்னொரு தாளமும் வழக்கத்தில் வருகிறது. இதற்குச் சாப்பு தாளம் என்று பெயர். இது ரூபக தாளத்தைப் போல 2 விபாகங்களையுடையது. இது அநேகமாய் தெம்பாங்கு, சிந்து, தங்கப்பாட்டு முதலிய சில்லரைப் பாட்டுகளில், வாசிப்பு இல்லாதவர்களால் உபயோகப்படுகிறதானாலும், தற்காலத்தில் சில வித்வான்களால் அபரூபமாய் கீர்த்தனைகளில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் பிரிவுகள் மூன்று. அவையாவன:—

1. த்ச்ரசாப்பு. = | = ‖ ‖ = | = ‖ ‖
ப | த ப ‖ ப | த ப ‖ 3 அங்கங்கள்,

இது தான் சரியான சாப்பு தாளம்.

2. கண்டசாப்பு. = ‖ | ± 2 3 ‖ = ‖ | ± 2 3 ‖
ச ரி | ச ரி க ‖ ரி க | ரி க ம ‖ 5 அங்கங்கள்,

3. மிச்ர சாப்பு. ± 2 3 | ± 2 3 4 ‖ ± 2 3 | ± 2 3 4 ‖
ச ரி க | ச ரி க ம ‖ ரி க ம | ரி க ம ப ‖
7 அங்கங்கள்.

விஷயம்-2. லகுதாளம்.

லகுதாளம் என்று வழங்கிவருகிற தாளத்திற்கும், ஏகதாளத்திற்கும் வித்யாச மில்லை. ஆனால் திச்ரலகு என்றும், மிச்ரலகு என்றும் இரண்டு லகுதாளங்கள் வழக்கத்திலிருக்கின்றன. இவைகள் முறையே திச்ர ஏகதாளமும், மிச்ர ஏகதாளமுமே. அதாவது ஒரே விபாகத்தையும், முறையே 3 அல்லது 7 அங்கங்களையுமுடையதாளங்கள்.

"THE great art of music, though it is an art meant to be beautiful and to move us, is a strict science having perfectly definite laws based upon the facts of sound."

THE BOOK OF KNOWLEDGE.

பாகம் II.

சங்கீத அப்பியாசம்.

சரளி, ஜண்டை வரிசைகள்,

கீதங்கள், வர்னங்கள்

முதலியன.

அத்தியாயம் 1.

சரளி, ஜண்டை வரிசைகள் முதலியன.

பிரிவு I

சரளி வரிசைகள்.

விஷயம்-1. மாணவர்களின் ஒழுங்கு.

சங்கீத அப்பியாசம் செய்து பயிற்சி யடையக் கருதும் எல்லா மாணவர்களும் கவனிக்கவேண்டிய விஷயங்களில் பிரதானமான சில அம்சங்களை இவ்விடம் போதிப்பது அவசியமாகத் தோன்றுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்பட்ட சதுர்வித புருஷார்த்தங்களைப் பெற சிரத்தையையுடைய மாணவர்கள் அவைகளை அனுசரித்து பலனடைய கடவுளைப் பிரார்த்திக்கப்படுகிறது.

காலை, மத்தியானம், மாலை இந்த மூன்று பொழுதுகள் ஒவ்வொன்றிலும், ஒரு காலத்தை நிர்ணயம் செய்து கொண்டு, அந்தக் காலம் தவறாமல் அப்பியாசம் செய்தல் வேண்டும். அவ்விதமாய் அப்பியாசம் செய்யும் பொழுது தேகமும், மனமும் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும். தேகசுத்தத்தை ஸ்நானத்தினாலும், மனசுத்தத்தை கடவுளை பக்தியுடன் தியானிப்பதினாலுமடையலாம். பிறகு, அவரவர் வழிபடுகடவுளை, சங்கீத வித்தையில் நல்ல ஞானம் உண்டாகும்படி, மனதினால் பிரார்த்திதல் வேண்டும். உபாத்தியாயர் எதிரிலிருந்தால் அவரை உள்ளன்புடன் வணங்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் பெரியோர் வாக்கியத்தை ஒருக்காலும் மறத்தல் கூடாது. உபாத்தியாயர் எதிரிலில்லாவிட்டால் மனதினால் வணக்கம் செய்தல் வேண்டும். அப்பியாசம் செய்யும்போது, உபயோகத்திலிருக்கும் கைகளைத் தவிர மற்ற தேகத்தின் அங்கங்கள் எவற்றையும் அசைத்தலும், ஆட்டுதலும் கூடாது. பற்களைக் காட்டுதல், சிரித்தல், கண்களைச் சிமிட்டல்,

முகத்தைக் கோணுதல் முதலிய யாதொரு அங்க விகாரங்களு மிருத்தல் கூடாது. வாத்தியத்தைப் பிடிப்பதும், கைகளையும் விரல்களையும் உபயோகிப்பதும், கிரமமாயும், சபைக்கு ரம்மியத்தை தரும் விதமாயும், இருத்தல் வேண்டும். மாணவர்களின் பார்வை வாத்தியத்தின் பேரிலிருத்தல் கூடாது. பாடுகிறவர்களின் பேரிலும், சபையின் பேரிலும் இருத்தல் வேண்டும். மத்தளம் முதலிய தாளக்கருவிகளை உபயோகிக்கிறவர்களும் இந்த விதிகளை அனுசரித்தல் மிகவும் நன்று. சுருக்கமாய்ச் சொல்லில், மாணவர்கள் பாடினாலும், வாத்தியம் வாசித்தாலும், தாளம் போட்டாலும் சித்திரப்பதுமை போல் இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் மனம் முழுவதும் சங்கீதத்தில் செல்லும். இந்தத் தேர்ச்சியால் பெரும் பொருளாகிய ஈசுவர பக்தியையும், சித்த சாந்தத்தையு மடையலாம்.

விஷயம்-2. சரளிவரிசைகளின் லட்சணம்.

ராகஸ்வராவளி என்கிற சரளிவரிசைகள் சப்தஸ்வரங்களுடனும், சுருதியுடனும், லயத்துடனும் மாணவர்கள் அப்பியாசம் செய்ய, பூர்வீக சங்கீத வித்வாம்சர்களால் அநேகம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் வழக்கத்தில் வருகிற பிரதானமானவைகளை மாத்திரம் மாணவர்கள் அப்பியாசம் செய்ய இந்த நூலில் போதிக்கப்படும்.

இந்த வரிசைகளெல்லாம் சுத்தமத்திமத்தில் 15-வது மேளகர்த்தாவாகிய மாயாமாளவ கவுள ராகத்தில் அப்பியாசம் செய்வது பிரசித்தம். அதாவது மேளகர்த்தா ராகப்பதகத்தில் காட்டப்பட்ட

1	2	5	6	8	9	12	13	
ச	சு-ரி	அ-க	சு-ம	ப	சு-த	கா-நி	ச்	இந்த

ஸ்வரஸ்தானங்களில் வாசிக்கப்படுகின்றன. மொத்தம் 13 ஸ்வரஸ்தானங்களில் மிகுதியாயிருக்கின்ற 5 ஸ்தானங்களில் 3, 4, 10, 11 இந்த நான்கு ஸ்தானங்கள் ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு ஸ்வரங்களைத் தருமாதலாலும், 7-வது ஸ்தானம் பிரிதிமத்திய ராகங்களுக்குச் சம்பந்தப்பட்டதாதலாலும், மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே சந்தேகத்தையும், பிரயாசத்தையும் தரக்கூடாதென்கிற கொள்

கையால் அவைகள் நீக்கப்பட்டன போலும். இன்னும், இந்த ராகம் ஆரோகணத்திலும், அவரோகணத்திலும் வற்சிய மில்லாமல் சப்தஸ்வரங்களையு முடைய சம்பூரண சம்பூரண மேளகர்த்தா ராக மாயு மிருக்கிறது. இதிலிருந்து அனேக விசேஷ ஜன்ய ராகங்கள் பிறந்திருக்கின்றன. மாணவர்கள் மேலே குறித்த 8 ஸ்வரஸ்தான ங்களில் விரல்களை உபயோகித்து பழகிவிட்டால் பிறகு மத்தியி லுள்ள 5 ஸ்வரஸ்தானங்களில் விரல்களை உபயோகிப்பது, வீணை, ஆர்மோனியம், பிடில் இந்த வாத்தியங்களில் சுலபமாயிருக்கும்.

விஷயம்-3. ஸ்வரபுஷ்டிப் பரிமாண, மாத்திரைக் கால அனுபவ ஞானம்.

சரளிவரிசைகளை அப்பியாசம் செய்வதற்கு முன்னதாக ஒவ் வொரு ஸ்வரத்தின் நாத புஷ்ட்டியையும், ஒரு ஸ்வரத்திற்கும் மற் றொரு ஸ்வரத்திற்கும் உள்ள நாத புஷ்டியின் வித்தியாசத்தையும், சம்பந்தத்தையம், மாத்திரை கால அளவின் நிர்ணயத்தையும் மாண வர்கள் செவ்வனே தெரிந்து கொள்ளல் அத்தியாவசியம். அவைக ளைப்பற்றி இந்த முதற் புத்தகத்திற்கு போதிய அளவு இவ்விடம் சுருக்கமாய்ச் சொல்லப்படும்.

விஷயம்.4. ஸ்வரபுஷ்டிப் பரிமாணம்.

சப்த ஸ்வரங்களும், அவைகளின் பல பிரிவுகளும், நாதத்தில் ஒன்றுக்கொன்று ஆரோகணத்தில் உயர்ந்து கொண்டும், அவரோக ணத்தில் குறைந்து கொண்டும் போகுமென்று பாகம் 1. அத்தி யாயம் I-ல் சொல்லப்பட்டிக்கிறது. இவ்விடம் ஒரு ஸ்வரம் எவ்வ ளவு நாத புஷ்ட்டியை யுடையதென்றும், ஒரு ஸ்வரத்திற்கும், இன் னொரு ஸ்வரத்திற்கும் நாத புஷ்ட்டி எவ்வளவு குறைந்தது அல்லது உயர்ந்தது என்றும் நாம் சந்தேகமறக் கற்றுக் கொண்டால் தான் ஸ்வரஞான அனுபவத்தை நாம் அடைந்ததாகச் சொல்லலாம்.

சீதோஷ்ணங்களை அளக்க தேர்மாமிடர் (Thermometer) என் கிற கருவிகளிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அம்மா திரியாகவே நாதம் அல்லது சப்தத்தின் புஷ்ட்டியை அளக்க அதா வது ஒவ்வொரு ஸ்வரத்திலும் எத்தனை கலைகள் இருக்கின்றதெ ன்று காட்ட ஒரு கருவி செய்யப்பட்டு, அதை நாம் உபயோகித்தால்

அதனால் ஸ்வரங்களின் நாத புஷ்டி பேதங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். எப்படி யென்றால், ஆதார ஸ்வரமாகிய, மந்திர சட்ஜமத்திற்கு இத்தனை கலையென்று முதலில் கண்டுகொண்டால் மற்ற ஸ்வரங்களுக்கெல்லாம், இனிச் சொல்லப்படும் கணக்கின்படி, அந்தக்கருவியானது, கலைகளைக் காட்டும் வரையிலும், அந்த அந்த ஸ்வரங்களின் நாதத்தின் உச்சரிப்பை நாம் உயர்த்தல் அல்லது தாழ்த்தல் செய்தால் ஒழிய, குறித்த ஸ்வரங்கள் சரியாக உச்சரிக்கப் பட்டனவென்று சொல்லுதல் பிழையாகும்.

உதாரணமாக தீரசங்கராபரண ராகத்திற்கு அமைக்கப்பட்ட ச, ரி, க, ம, ப, த, நி, ச் என்னும் ஸ்வரங்களில் ஆதார ஸ்வரமாகிய (ச) சட்ஜமத்திற்கு 24 கலைகள் என்று நாம் வைத்துக் கொண்டால் மற்ற ஸ்வரங்களுக்கு அதனதன் கீழ்க்காட்டப்பட்ட கணக்குப்படி கலைகள் ஏற்பட்டால் தான் அந்த ராகம் சுத்தமாய், தப்பிதமின்றி பாடப்பட்டது என்று சொல்லுவார்கள்:—

ச	ரி	க	ம	ப	த	நி	ச்
—,	—,	—,	—,		—,	—,	—,
மத்திம ஸ்தாயி	(ச)	(அ)	(சு)	மத்திம ஸ்தாயி	(ச)	(கா)	தார ஸ்தாயி
24,	27,	30,	32,	36,	40,	45,	48.

கருவி யில்லாமல் மனோதர்மத்தினாலேயே நாம் தெரிந்து கொள்வது அவசிய மாதலால், ஆதார சட்சமத்தின் நாத புஷ்ட்டி ஒன்று என்று நாம் வைத்துக் கொண்டால் மற்ற ஏழு ஸ்வரங்களும் எவ்வளவு மடங்கு உயர்ந்த நாதத்தைத் தரவேண்டு மென்று இதன் கீழ் குறிக்கப்பட்டிருக்கிறது.

ரி	க	ம	ப	த	நி	ச்
—,	—,	--,		—,	—,	
(ச)	(அ)	(சு)		(ச)	(கா)	
$\frac{1}{8}$,	$\frac{1}{4}$,	$\frac{1}{3}$,	$\frac{1}{2}$,	$\frac{2}{3}$,	$\frac{7}{8}$,	1

சரளீ வரிசைகளை முதலில் பாடி அப்பியாசம் செய்யவேண்டிய, மாயாமாளவ கவுள ராகத்திற்கு அமைந்த ஸ்வரங்களின் நாத புஷ்ட்டிப் பரிமாணத்தையும் மாணவர்கள் தெரிந்துகொள்ள இவ்விடம் காட்டப்படும்:—

ஸ்வரங்கள்	ரி — (சு)	க —, (அ)	ம —, (சு)	ப	த —, (சு)	நி —, (கா)	ச்
கலைகளின் எண்	$25\frac{1}{2}$,	30,	32,	36,	38,	45,	48
ச-வைவிட எவ்வளவு மடங்கு அதிக நாதம்	$\frac{1}{16}$	$\frac{1}{4}$,	$\frac{1}{3}$,	$\frac{1}{2}$,	$\frac{7}{12}$,	$\frac{7}{8}$,	1

இன்னும், மந்திர ஸ்தாயில் 5 ஸ்வரங்களும், மத்திம ஸ்தாயியில் 12 ஸ்வரங்களும், தாரஸ்தாயியில் 8 ஸ்வரங்களும் ஆர்மோனியம், பிட்டில், வீணை முதலிய வாத்தியங்களில் சாதாரண வழக்கத்தில் பிரயோகிக்கப்படுகின்றன வென்று ஸ்வர அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதார ஸ்வரமாகிய மந்திர ச-வுக்கு நாத புஷ்டி 24 கலைகள் என்று வைத்துக் கொண்டால், பாக்கி நிற்கும் 24 ஸ்வரங்கள் ஒவ்வொன்றுக்கும் எத்தனை கலைகள் ஏற்படும் என்றும், அந்த நாதம் ஆதார சட்ஜம நாதத்திற்கு எத்தனை மடங்கு உயர்ந்து அல்லது தாழ்ந்து இருக்கும் என்றும் அடுத்த விஷயம்-5-இல் காட்டப்பட்ட ஜாப்தாவில் விவரமாய் வரையப் பட்டிருக்கின்றன. இந்தக் கணக்கின்படி தான் ஆர்மோனியத்தில் ரீட் (Reed) என்று சொல்லப்படும் நாதச் சட்டமும், வீணையில் சாரிகைகள் என்கிற மெட்டுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இந்த வாத்தியங்களில் வரும் நாத புஷ்டியை ஒட்டி மாணவர்கள் ஸ்வரங்களை உச்சரித்து அப்பியாசம் செய்து ஸ்வர ஞானத்தை அடையலாம். ஆனால் ஊமை வாத்தியம் என்று சிலரால் சொல்லப்படும் பிடிலில் எந்த ஸ்வரஸ்தானமும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஸ்வர அத்தியாயத்திற் சொல்லியபடி, ஸ்வரஸ்தானங்களை முதலில் உபாத்தியாயரால் நிர்ணயம் செய்வித்துக் கொண்டு, உபாத்தியாயராலேயே சுருதி கூட்டிக்கொண்டு. விஷயம் 7-ல் வரையப்பட்ட பாடத்தை அப்பியாசம் செய்து ஸ்வர ஞானத்தை மாணவர்கள் அடைய வேண்டும்.

விஷயம்-5, ஸ்வரங்களின் நாதப்பிரமாண ஜாப்தா

ஆதார சட்ஜம நாதத்திற்கு கலைகள் 24 என்று வைத்துக் கொண்டால், பாக்கி நிற்கும் 24 ஸ்வரங்கள் ஒவ்வொன்றிற்கும் எத்தனை கலைகளிருக்கவேண்டு மென்றும், அவைகள் ஆதார சட்சமக் கலைகளுக்கு எத்தனை மடங்கு உயர்ந்தன அல்லது குறைந்தன வென்றும் அடுத்தபக்கத்தில்கண்ட ஜாப்தாவில் விவரிக்கப்படும்.

ஸ்வரங்களின் நாதப்பிரமாண ஜாப்தா.

	ஸ்வரங்கள்	கலைகள்	ஆதாரமத்திம சட்ஜம நாதத்திற்கு எத்தனை கலைகள் உயர்ந்தது	ஆதாரமத்திம சட்ஜம நாதத்திற்கு எத்தனை மடங்கு உயர்ந்தது
	மத்திம ஸ்தாயி			
1	ச(ஆதாரசட்ஜமம்)	24	(வைத்துக் கொள்ளப்பட்டது)	
2	ரி(சு)	$25\frac{1}{2}$	$1\frac{1}{2}$	$\frac{1}{16}$
3	ரி(ச), க(சு)	27	3	$\frac{1}{8}$
4	ரி(ஷ), க(சா)	$28\frac{1}{2}$	$4\frac{1}{2}$	$\frac{3}{16}$
5	க(அ)	30	6	$\frac{1}{4}$
6	ம(சு)	32	8	$\frac{1}{3}$
7	ம(பி)	34	10	$\frac{5}{12}$
8	ப	36	12	$\frac{1}{2}$
9	த(சு)	38	14	$\frac{7}{12}$
10	த(ச), நி(சு)	40	15	$\frac{2}{3}$
11	த(ஷ), நி(கை)	$42\frac{1}{2}$	$18\frac{1}{2}$	$\frac{3}{4}$ (சுமார்)
12	நி(கா)	45	21	$\frac{7}{8}$
	தார ஸ்தாயி			
1	ச்(தாரசட்ஜமம்)	48	24	1
2	ரி்(சு)	$49\frac{1}{2}$	$25\frac{1}{2}$	$1\frac{1}{16}$
3	ரி்(ச), க்(சு)	51	27	$1\frac{1}{8}$
4	ரி்(ஷ), க்(சா)	52	28	$1\frac{3}{16}$
5	க்(அ)	54	30	$1\frac{1}{4}$
6	ம்(சு)	56	32	$1\frac{1}{3}$
7	ம்(பி)	58	34	$1\frac{5}{12}$
8	ப்	60	36	$1\frac{1}{2}$
	மந்திர ஸ்தாயி		எத்தனை கலைகள் குறைந்தது	எத்தனை மடங்கு குறைந்தது.
	ச(ஆதாரசட்ஜமம்)	24	(வைததுக் கொள்ளப்பட்டது.)	
1	ந̣ி(கா)	21	3	$\frac{1}{8}$
2	ந̣ி(கை), த̣(ஷ)	$18\frac{1}{9}$	$5\frac{1}{2}$	$\frac{1}{4}$ (சுமார்)
3	ந̣ி(சு); த̣(ச)	16	8	$\frac{1}{3}$
4	த̣(சு)	14	10	$\frac{5}{12}$
5	ப̣	12	12	$\frac{1}{2}$

விஷயம்-6. மாத்திரைக்கால அனுபவ ஞானம்.

விஷயம் 7-ல் காட்டப்பட்ட பாடத்தை, ஆவர்த்தத்தின் அங்கத்திற்கு ஒரு மாத்திரை கால அளவுப்படியும், அதில் குறிக்கப்பட்ட விதமாயும் வாசித்து அப்பியாசம் செய்து மாத்திரைக்கால அளவை மனோதர்பத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

இவ்விதம் அப்பியாசம் செய்வதற்கு முந்தியே மாத்திரைக்காலக் அளவைப்பற்றி மாணவர்கள் குற்றமறக் கறுக்கொள்ள, அதைப்பற்றித் தாள அத்தியாயத்திற் பேசியிருப்பதை அனுசரித்து இவ்விடம் சுருக்கமாய்ச் சொல்லப்படும்.

மார்க்கம்	காலம்	குறில்கள்	அங்கங்கள்	மாத்திரை
விளம்பிதம்	சவுக்கம்	4	4	1
,,	மத்திமம்	8	4	2
,,	த்ரி	16	4	4
தீவிரம்	சவுக்கம்	8	4	1
,,	மத்திமம்	16	4	2
,,	த்ரி	32	4	4

இந்த அத்தியாயத்திலும், இனிமேலும் சொல்லப்படும் சரளிகள், கீதங்கள், வர்ணங்கள், கீர்த்தனைகள் முதலியவைகளை அப்பியாசம் செய்வதற்கு முன், இந்த நூலில் பிரயோகம் செய்யப்பட்ட அடையாளங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் மாணவர்கள் செவ்வையாய்த் தெரிந்துகொள்ள அடுத்த 7-வது விஷயத்தில் ஒரு அடையாள அர்த்த ஜாப்தா அச்சிடப்பட்டிருக்கின்றது.

விஷயம்—7. அடையாளங்களும் அவைகளின் அர்த்தமும்.

அடையாளம்	அர்த்தம்
,	ஒரு குறில் அக்ஷரகாலத்தைக் காட்டும்;
,, / ,,,,	முறையே இரண்டு அல்லது நான்கு குறில்கள் அல்லது முறையே ஒரு நெடில் அல்லது இரண்டு நெடில்களின் அக்ஷரகாலத்தைக் காட்டும்;
+	ஆவர்த்தத்தின் அங்கங்களைப் பிரிக்கும்;
|	ஆவர்த்தத்தின் விபாகங்களைப் பிரிக்கும்;

ரிகம||	ஸ்வரங்களுக்கும் பின் வந்தால் ஆவர்த்தத்தின் முடிவைக் காட்டும்;
$\overline{\overline{ச}}$	ஸ்வரத்தின்மேல் வந்தால் தாளத்தின் காதை அல்லது தட்டுதலைக் காட்டும்;
|| க	ஸ்வரத்தின்மேல் வந்தால் தட்டினபின் திருப்புதல் அல்லது தள்ளுவதைக் காட்டும்;
± ம	ஸ்வரத்தின்மேல் வந்தால் தாள அங்கங்களை எண்ணுவதற்குமுன் தட்டுதலைக் காட்டும்;
2 3 4 ப, த, நி	ஸ்வரத்தின்மேல் எண்கள் போடப்பட்டால் அது தட்டி எண்ணுவதின் அங்க சங்கையைக் காட்டும்;
நி̇	ஸ்வரத்தின் பேரில் புள்ளியிருந்தால் அது தார அல்லது எச்சு ஸ்தாயி ஸ்வரம் என்று குறிக்கும்;
நி̣	ஸ்வரத்தின்கீழ் புள்ளியிருந்தால் அது மந்திர அல்லது தக்கு ஸ்தாயி ஸ்வரம் என்று குறிக்கும்;
நி	ஸ்வரத்தின் கீழும், மேலும் புள்ளி இல்லாதிருந்தால் அது மத்தியம ஸ்தாயி ஸ்வரம் என்று குறிக்கும்;
$\overline{சரிகம}$	ஸ்வரங்களின் மேல் ஒரு நீளக்கோடு இருந்தால் அது தீவிர காலத்தைக் காட்டும்;
$\overline{\overline{சரிகம}}$	ஸ்வரங்களின் மேல் இரண்டு நீளக்கோடுகளிருந்தால் அது அதிதீவிர காலத்தைக் காட்டும்.

விஷயம்—8. ஸ்வரக்கியான, மாத்திரை கால அப்பியாசப் பாடம்.

ராகம் - மாயாமாளவகவுள ; தாளம் - ஆதி.

ஸ்வர ஸ்தானங்கள்.

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
ச	சு-ரி	ச-ரி சு-ரி	ஷ-ரி சா-க	அ-க	சு-ம	பி-ம	ப	சு-த	ச-த சு-நி	ஷ-த கை-நி	கா-நி	ச்
ச	ரி	—	—	க	ம	—	ப	த	—	—	நி	ச்

தாளம் போடும் மாதிரி பாடத்தின் தலைப்பில் காட்டப்பட்டிருக்கிறது.

± +2 +3 +4 ǀ = +॥ ǀ = +॥ ॥

விளம்பித - த்ரிகாலம்; முதல் அப்பியாசம்.

I. சா,, +ரீ,, +கா,, +மா,, ǀ பா,, +தா,, ǀ நீ,, +ச்ா,, ॥
ச்ா,, +நீ,, +தா,, +பா,, ǀ மா,, +கா,, ǀ ரீ,, +சா,, ॥

விளம்பித - த்ரிகாலம்; இரண்டாம் அப்பியாசம்.

II. சாரீ +காமா +பாதா +நீச்ா ǀ ச்ாநீ +தாபா ǀ மாகா +ரீசா ॥

விளம்பித - திரிகாலம் ; மூன்றும் அப்பியாசம்.

III. சரிகம +பதநிச் +ச்நிதப +மகரிச ǀ சரிகம +பதநிச் ǀ ச்நிதப +மகரிச ॥

தீவிர-மத்தியம கால அப்பியாசம்.

IV. சரிகம/பதநிச் + ச்நிதப/மகரிச + சரிகம/பதநிச் + ச்நிதப/மகரிச் ǀ சரிகம/பதநிச் + ச்நிதப/மகரிச ǀ சரிகம/பதநிச் + ச்நிதப/மகரிச ॥

குறிப்பு.

முதல் அப்பியாசத்தில் முதல் ஆவர்த்தத்திலுள்ள 8 அங்கங்களில் ஒவ்வொரு அங்கமும் ஒரு நீண்ட நெடில் (சா,,), அல்லது நான்கு குறில்களுக்குச் சமானம்.

இரண்டாவது அப்பியாசத்திலுள்ள ஆவர்த்தத்தின் 8 அங்கங்களில் ஒவ்வொரு அங்கமும் இரண்டு நெடில்கள் (சாரீ), அல்லது நான்கு குறில்களுக்குச் சமானம்.

மூன்றாவது அப்பியாசத்திலுள்ள ஆவர்த்தத்தின் 8 அங்கங்களில் ஒவ்வொரு அங்கத்திலும் நான்கு, நான்கு குறில்களே யிருக்கின்றன.

நான்காவது அப்பியாசத்திலுள்ள ஆவர்த்தத்தின் 8-அங்கங்களில் ஒவ்வொரு அங்கத்திலும் 8 தீவிர குறில்களிருக்கின்றன. இவைகளும் நான்கு குறில்களுக்குச் சமானமே.

ஆகையினால் ஒவ்வொரு அங்கத்தின் கால அளவு ஒரு மாத்திரை; ஆவர்த்தத்தின் கால அளவு 8 மாத்திரைகள்.

விஷயம்—9. முதல் பாடத்தை ஆர்மோனியத்தில் வாசிக்கும் விதம்.

முதல் பாடத்தில், 1-வது அப்பியாசத்திலுள்ள.

சா,,, ரீ,, முதலிய அகங்கங்கள் ஒவ்வொன்றையும், சம்பந்தப்பட்ட ஸ்வரக்கட்டையில், ஒரு மாத்திரை அதாவது 4 குறில் அக்ஷர காலம் வரையிலும், விரலை வைத்திருக்க வேண்டும்.

II-வது அப்பியாசத்திலுள்ள சாரீ, காமா முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றிலு முள்ள சா, ரீ, கா, மா என்னும் ஒவ்வொரு நெடிலுக்கும் சம்பந்தப்பட்ட ஸ்வரக்கட்டையில் $\frac{1}{2}$ மாத்திரை அதாவது இரண்டு குறில் அக்ஷரகாலம் வரையிலும் விரலை வைத்திருக்க வேண்டும்.

III.-வது அப்பியாசத்திலுள்ள சரிகம, பதநிச் முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள, ச, ரி, க, ம, ப, த, நி, ச் என்னும் ஒவ்வொரு குறிலுக்கும் சம்பந்தப்பட்ட ஸ்வரக்கட்டையில் $\frac{1}{4}$ மாத்திரை அதாவது ஒரு குறில் அக்ஷரகாலம் தான் விரலை வைத்திருக்க வேண்டும்.

IV-வது அப்பியாசத்திலுள்ள சரிகமபதநிச், ச்நிதபமகரிச முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றிலு முள்ள ச-ரி-க-ம-ப-த-நி-ச் என்னும் ஸ்வரக்கட்டைகள் ஒவ்வொன்றிலும், $\frac{1}{8}$ மாத்திரை அதாவது $\frac{1}{2}$ குறில்

அக்ஷரகாலம் தான் விரலை வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் இது தீவர காலம். ஆகையினால், இந்தக்காலத்தில் மூன்றுவது காலத்தில் வாசிப்பதை விட இரண்டு மடங்கு துரிதமாய் வாசிக்க வேண்டும். இதை அடைவதற்கு மாணவர்கள் விரல்களை கட்டைகளின் பேரில் துரிதமாய்ப் போடவேண்டும். ஆகையினல் மாணவர்கள் கட்டைகளைத்தட்டும் பொழுது விரல்களைப் பட்டையாக வைத்து அழுத்தாமல் விரல்களின் நுனிகளை மாத்திரம் வைத்துத்தட்டப் பழக்கம் செய்ய வேண்டும். இந்தக் காலத்தைவிட துரிதமாய் வாசிக்க ஆர்மோனியப் பெட்டி அமைக்கப்பட்டிருக்க வில்லை.

விஷயம்—10, முதல் பாடத்தைப் பிட்டிலில் வாசிக்கும் விதம்.

பிட்டிலில் வில்லின் நீளம் முழுவதும் போடுதலாலும், நீளத்தைக் குறைத்துப் போடுதலாலும், வில்லை நிதானமாய் அல்லது துரிதமாய்ப் போடுதலாலும் முதல், இரண்டு, மூன்று, நான்கு காலங்களின்படி சரளிகளை வாசிக்கலாம். மாணவர்கள் ஒரு மாத்திரைக் காலத்திற்கு ஒரு வில்லும், ஒரு மாத்திரை காலத்திற்கு இரண்டு வில்லும், ஒருமாத்திரை காலத்திற்கு நான்கு வில்லும் போட்டுச் சாதகம் செய்யவேண்டும்! எப்படி யென்றால் 1-வது அப்பியாசத்தில் சாரீ என்னும் அங்கத்திற்கு ஒரு முழுவில்லும், II-வது அப்பியாசத்தில் சா, என்னும் அங்கத்திலுள்ள இரண்டு பகுதிகள் ஒவ்வொன்றிற்கும், அதாவது சாக்கு $\frac{1}{2}$ வில்லும், ரீ-க்கு $\frac{1}{2}$ வில்லும் போட்டு வாசிக்க வேண்டும். III-வது அப்பியாசத்தில் சரிகம என்னும் அங்கத்திலுள்ள நான்கு பகுதிகள் ஒவ்வொன்றிற்கும், அதாவது ச-க்கு $\frac{1}{4}$ வில்லும்' ரி-க்கு $\frac{1}{4}$ வில்லும், க-க்கு $\frac{1}{4}$ வில்லும், ம-க்கு $\frac{1}{4}$ வில்லும் போட்டு வாசிக்க வேண்டும். IV-வது அப்பியாசத்தில் சரிகமபதநிச என்னும் அங்கத்திலுள்ள எட்டுப்பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் அதாவது ச, க, ரி, ம, ப, த, நி, ச என்னும் ஸ்வரங்கள் ஒவ்வொன்றிற்கும் $\frac{1}{8}$ வில் போகடுச் வாசிக்க வேண்டும். அல்லது துரிதமாக $\frac{1}{4}$ வில் போட்டு வாசிட்க் வேண்டும். இவ்விதமாக அப்பியாசம் செய்தும், வில்லை மெதுவாயும், துரிதமாயும் மாத்திரைக்கால நிர்ணயப்படி போட்டுச் சாதகம்செய்து தேர்ச்சி அடைந்தால் நாளடைவில் அதிதீவிர காலத்திலும் பிட்டிலில் வாசிக்க இயலும், இந்த அப்பியாசம் முடிந்ததும் 89-வது பக்கத்திற்

சொல்லப்பட்ட பாக்கி நிற்கும் 8 ராகங்களிலும் அப்பியாசம் செய்து தேர்ச்சியை அடைய வேண்டும்.

விஷயம்.—11. சரளிவரிசைகள்.

சரளிவரிசைகள் எல்லாவற்றையும், முதலில் மாயாமாளவ கவுள ராகத்தில் ஸ்வரக்கியானத்துடனும், ஆதிதாளத்தில் விஷயம் 5-ல் சொல்லப்பட்ட 6 காலங்களிலும் வாசிக்க வேண்டும். இவ்விதமாய் அப்பியாசம் செய்வதற்கு உதாரணமாக முதல் சரளியை 6 காலங்களிலும் வரையப்பட்டிருக்கிறது. மற்ற சரளிகள் விளம்பித மத்தியம காலத்தில் மாத்திரம் காட்டப்பட்டிருந்தாலும், அவைகளைப்பிரித்து முதல் சரளியைப் போல மற்ற 5 காலங்களிலும் அப்பியாசம் செய்ய வேண்டும். பிறகு மற்ற 8 ராகங்களிலும் அப்பியாசம் செய்ய வேண்டும்.

ராக லட்சணம்.

மாயாமாளவ கவுள ராகம் 15-வது மேள கர்த்தா ராகமாகையினால் அது ஆரோகணத்திலும், அவரோகணத்திலும் ஸ்வரவற்சிதமில்லாத சப்தஸ்வரங்களையுமுடைய சம்பூரண சம்பூரணசுத்தராகம்.

மேளகர்த்தாவின் ஸ்வரஸ்தானங்கள்.

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
ச	சு—ரி	ச-ரி சு-க	ஷ-ரி சா—க	அ-க	சு—ம	பி-ம	ப	சு-த	ச-த சு—நி	ஷ-த கைநி	கா—நி	ச்
ச	ரி	—	—	க	ம	—	ப	த	—	—	நி	ச்

தாள லட்சணம்

ஆதி தாளம் 3 விபாகங்களையும், 8 அங்கங்களையுமுடையது. ஆவர்த்தத்தின் கால அளவு விளம்பித த்ரி காலத்தில் 8 மாத்திரை மற்ற காலங்கங்களின் மாத்திரைக் கணக்கு அந்தந்த காலத்திற்குப் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

தாளம் போடும் மாதிரி சரளிகளின் தலைப்பில் காட்டப்பட்டிருக்கிறது.

முதல் சரளிவரிசை.

I. விளம்பித - சவுக்காலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் - 2.

± 2 3 4	= ‖	= ‖ ‖
ச ரி க ம	ச ரி	க ம ‖
ச ரி க ம	ப த	நி ச் ‖
ச் நி த ப	ச் நி	த ப ‖
ச் நி த ப	ம க	ரி ச ‖

விளம்பித-மத்தியம காலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் - 4.

± 2 3 4	= ‖	= ‖ ‖
சரி கம சரி கம	சரி கம	பத நிச் ‖
சநி தப ச்நி தப	ச்நி தப	மக ரிச ‖

III. விளம்பித - த்ரிகாலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் - 8.

± 2 3 4	= ‖	= ‖ ‖
சரிகம சரிகம சரிகம பதநிச்	ச்நிதப ச்நிதப	ச்நிதப மகரிச ‖

IV. தீவிர - சவுக்ககாலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் - 2.

± 2 3 4	= ‖	= ‖ ‖
சரி கம சரி கம	சரி கம	பத நிச் ‖
ச்நி தப ச்நி தப	ச்நி தப	மக ரிச ‖

V. தீவிர - மத்தியமகாலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் -4.

± 2 3 4	= ‖	= ‖ ‖
சரி கம சரி கம சரி கம பத நிச்	ச்நி தப ச்நி தப	ச்நி தப மக ரிச ‖

VI. தீவிர - த்ரிகாலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் - 8.

±	2	3	4 |
சரிகம சரிகம	சரிகம பதநிச்	ச்நிதப ச்நிதப	ச்நிதப மகரிச |
=	|| |	=	|| ||
சரிகம சரிகம	சரிகம பதநிச் |	ச்நிதப ச்நிதப	ச்நிதப மகரிச ||

II. மற்ற சரளிவரிசைகள்.

விளம்பித - மத்தியமகாலம்.

ஆவர்த்தத்தின் மாத்திரைகாலம் - 4.

	± 2 3 4 |	= || |	= ||
1.	சரிகம சரிசரி ச்நிதப ச்நிச்நி	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச
2.	சரிக-ச ரிக-சரி ச்நித-ச் நித-ச்நி	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச
3.	சரிகம பாபா ச்நிதப மாமா	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச
4.	சரிகம பாசரி ச்நிதப மாச்நி	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச
5.	சரிகம பமகரி ச்நிதப மபதநி	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச
6.	சரிகம பமதப ச்நிதப மபகம	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச
7.	சரிகம ரிகமப ச்நிதப நிதபம	சரிகம ச்நிதப	பதநிச் மகரிச

± 2 3 4	= ||	= ||
8. சரிகம பா,,	காமா	பாபா
கமபத நிதபம	கமப-க	மகரிச
9. ச்ாநித நீதப	தாமப	பாபா
கமபத நிதபம	கமப-க	மகரிச
10. சரிகரி கா-கம	பமபா	தபதா
மபதப தநிதப	மபதப	மகரிச
11. சரிகம பாபா	ததபா	மமபா
தநிச்ா ச்நிதப	ச்நிதப	மகரிச

III. மேல் ஸ்தாயி வரிசைகள்.

± 2 3 4	= ||	= ||
1. சரிகம பதநிச்	ச்ா,,	ச்ா,,
தநிச்ரி ச்நிதப	ச்நிதப	மகரிச
2. சரிகம பதநிச்	ச்ா,,	ச்ா,,
தநிச்ரி ச்ச்ரிச்	ச்ரிச்நி	தபமப
தநிச்ரி ச்நிதப	ச்நிதப	மகரிச
3. சரிகம பதநிச்	ச்ா,,	ச்ா,,
தநிச்ரி க்ரிச்ரி	ச்ரிச்நி	தபமப
தநிச்ரி ச்ச்ரிச்	ச்ரிசநி	தபமப
தநிச்ரி ச்நிதப	ச்நிதப	மகரிச
4. சரிகம பதநிச்	ச்ா,,	ச்ா,,
தநிச்ரி க்ம்க்ரி	ச்ரிச்நி	தபமப
தநிச்ரி க்ரிச்ரி	ச்ரிச்நி	தபமப
தநிச்ரி ச்ச்ரிச்	ச்ரிச்நி	தபமப
தநிச்ரி ச்நிதப	ச்நிதப	மகரிச

பிரிவு—II

ஜண்டை வரிசைகள்.

பாகம் - I, பிரிவு IV-ல் சொல்லப்பட்ட கமகங்களில் சம்பந்தப்பட்ட ஸ்புரிதம், கம்பிதம், திருபுச்சம் ஆகிய இந்த பிரயோகங்களை அப்பியாசம் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஸ்வரத்தொகுதிகளை ஜண்டை வரிசை என்று சொல்லப்படும்.

ஒரு ஸ்வரம் அடுத்தடுத்து எத்தனை தடவை பிரயோகமாகிறதோ அந்தக் கணக்கின்படி ஆர்மோனியத்தில் அந்த ஸ்வரத்தைத் தரும் கட்டையைத் தட்டுதலினுல் வேண்டிய கமகம் அடையப்படும்.

பிட்டிலிலோ இதை இரண்டு விதமாய் அடையலாம். தந்தியிலுள்ள குறித்த ஸ்வர ஸ்தானத்தை விரலால் அழுத்திக்கொண்டு, வில்லை வேண்டிய ஸ்வரக்கணக்கின்படி இழுத்தலாலும், அல்லது விரலைக் குறித்த கணக்கின்படி தந்தியிலுள்ள ஸ்வர ஸ்தானத்தைத் தட்டி ஒரே வில் போடுதலாலும் அடையலாம்.

இந்த இரண்டு விதங்களில் பின்னுல் சொன்ன விதம் வாசித்தால் செவிக்கு இன்பத்தைத் தருவதுமன்றி, துரித காலத்தில் வாசிப்பதற்கு அனுகூலமாயுமிருக்கும்.

ஜண்டை வரிசைகள் அடுத்தப் பக்கத்தில் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளை சரளிவரிசைகளைப் போல மாயாமாளவ கவுள ராகத்திலும், ஆதி தாளத்திலும், அவைகளுக்குத் தலைப்பில் காட்டப்பட்ட இரண்டு காலங்களிலும் அப்பியாசம் செய்து, பிறகு மற்ற காலங்களிலும், மற்ற 8 விசேஷ ராகங்களிலும் பழகுவது ஒழுங்கு.

ஜண்டை வரிசைகள்.

I. விளம்பித - மத்தியம காலம் - ஆவர்த்த மாத்திரை - 4.
(இதைத் தீவிர - சவுக்க காலத்தில் வாசித்தால் ,, 2.)

	± 2 3 4	= ‖	= ‖
1.	சசரிரி ககமம	பபதத	நிநிச்ச்
	ச்ச்நிநி ததபப	மமகக	ரிரிசச
2.	சசரிரி ககமம	ரிரிகக	மமபப
	ககமம பபதத	மமபப	ததநிநி
	பபதத நிநிச்ச்	ச்ச்நிநி	ததபப
	நிநிதத பபமம	ததபப	மமகக
	பபமம ககரிரி	மமகக	ரிரிசச
3.	சசரிரி ககரிரி	சசரிரி	ககமம
	ரிரிகக மமகக	ரிரிகக	மமபப
	ககமம பபமம	ககமம	பபதத
	மமபப ததபப	மமபப	ததநிநி
	பபதத நிநிதத	பபதத	நிநிச்ச்
	ச்ச்நிநி ததநிநி	ச்ச்நிநி	ததபப
	நிநிதத பபதத	நிநிதத	பபமம
	ததபப மமபப	ததபப	மமகக
	பபமம ககமம	பபமம	ககரிரி
	மமகக ரிரிகக	மமகக	ரிரிசச
4.	சசரிரிக - சரிக	சசரிரி	ககமம
	ரிரிககம - ரிகம	ரிரிகக	மமபப
	ககமமப - கமப	ககமம	பபதத
	மமபபத - மபத	மமபப	ததநிநி
	பபததநி - பதநி	பபதத	நிநிச்ச்
	ச்ச்நிநித - ச்நித	ச்ச்நிநி	ததபப
	நிநிததப - நிதப	நிநிதத	பபமம
	ததபபம - தபம	ததபப	மமகக
	பபமமக - பமக	பபமம	ககரிரி
	மமககரி - மகரி	மமகக	ரிரிசச

	± 2 3 4	= ‖	= ‖
5.	சாச - ரீரி - கக	சசரிரி	ககமம
	ரீரி - காக - மம	ரிரிகக	மமபப
	காக - மாம - பப	ககமம	பபதத
	மாம - பாப - தத	மமபப	ததநிநி
	பாப - தாத - நிநி	பபதத	நிநிச்ச்
	ச்ாச் - நீநி - தத	ச்ச்நிநி	ததபப
	நீநி - தாத - பப	நிநிதத	பபமம
	தாத - பாப - மம	ததபப	மமகக
	பாப - மாம - கக	பபமம	ககரிரி
	மாம - காக - ரிரி	மமகக	ரிரிசச
6.	சசா - ரிரீ - கக	சசரிரி	ககமம
	ரிரீ - ககா - மம	ரிரிகக	மமபப
	ககா - மமா - பப	ககமம	பபதத
	மமா - பபா - தத	மமபப	ததநிநி
	பபா - ததா - நிநி	பபதத	நிநிச்ச்
	ச்ச்ா - நிநீ - தத	ச்ச்நிநி	ததபப
	நிநீ - ததா - பப	நிநிதத	பபமம
	ததா - பபா - மம	ததபப	மமகக
	பபா - மமா - கக	பபமம	ககரிரி
	மமா - ககா - ரிரி	மமகக	ரிரிசச
7.	சசச - ரிரிரி - கக	சசரிரி	ககமம
	ரிரிரி - ககக - மம	ரிரிகக	மமபப
	ககக - மமம - பப	ககமம	பபதத
	மமம - பபப - தத	மமபப	ததநிநி
	பபப - ததத - நிநி	பபதத	நிநிச்ச்
	ச்ச்ச் - நிநிநி - தத	ச்ச்நிநி	ததபப
	நிநிநி - ததத - பப	நிநிதத	பபமம
	ததத - பபப - மம	ததபப	மமகக
	பபப - மமம - கக	பபமம	ககரிரி
	மமம - ககக - ரிரி	மமகக	ரிரிசச

பிரிவு - III.

தாட்டு வரிசைகள்.

ஒரு ராகத்திற்கு அமைக்கப்பட்ட ஸ்வரத் தொகுதிகள் வரிசையாக வராமல் அதாவது முறையே ஒன்றின்பின் ஒன்று வராமல் இடையிலுள்ள ஸ்வரங்களில் ஒன்று அல்லது அதிகமாக விடப்பட்டு,விடப்பட்ட கடைசி ஸ்வரத்திற்கு அடுத்த ஸ்வரத்தைத் தழுவி, அதாவது விடப்பட்ட ஸ்வரங்களைத் தாண்டிவருகிற ஸ்வரத்தொகுதிகளை தாட்டு வரிசை என்று சொல்லுவார்கள்.

இதையும் சரளி வரிசைகளைப் போல மாயாமாளவகவுள ராகத்திலும், ஆதிதாளத்திலும், 6-காலங்களிலும் வாசித்து அப்பியாசம் செய்யவேண்டும். அடியிற்கண்ட அப்பியாச பாடம் விளம்பித - மத்தியம காலத்தில் வரையப்பட்டிருக்கிறது. அதற்கு மாத்திரை காலம்–4.

± 2 3 4	= ‖	= ‖
சமகம - ரிகசரி	சகரிக	சரிகம
ரிபமப - கமரிக	ரிமகம	ரிகமப
கதபத - மபகம	கபமப	கமபத
மநிதநி - பதமப	மதபத	மபதநி
பச்நிச் - தநிபத	பநிதநி	பதநிச்
ச்பதப - நிதச்நி	ச்தநித	ச்நிதப
நிமபம - தபநித	நிபதப	நிதபம
தகமக - பமதப	தமபம	தபமக
பரிகரி - மகபம	பகமக	பமகரி
மசரிச - கரிமக	மரிகரி	மகரிச

பிரிவு - IV.

அலங்காரங்கள்.

35-அலங்காரங்களும் விளம்பித-சவுக்க காலத்தில் வரையப்பட்டிருக்கின்றன. மாத்திரை காலக்கணக்கு அங்கம் ஒன்றுக்கு $\frac{1}{4}$ - மாத்திரை.

விஷயம்—1. த்ருவதாளம்.

1. சதுர்ச த்ருவதாளம் - 4 விபாகங்கள், 14 அங்கங்கள்.

±234	=||	±234	±234
சரிகம	க ரி	சரிகரி	சரிகம
ரிகமப	ம க	ரிகமக	ரிகமப
கமபத	ப ம	கமபம	கமபத
மபதநி	த ப	மபதப	மபதநி
பதநிச்	நி த	பதநித	பதநிச்
ச்நிதப	த நி	ச்நிதநி	ச்நிதப
நிதபம	ப த	நிதபத	நிதபம
தபமக	ம ப	தபமப	தபமக
பமகரி	க ம	பமகம	பமகரி
மகரிச	ரி க	மகரிக	மகரிச

2. திச்ர த்ருவ்தாளம் - 4 விபாகங்கள், 11 அங்கங்கள்.

±23	=||	±23	±23
சரிக	ச க	ரிகம	கமப
ரிகம	ரி ம	கமப	மபத
கமப	க ப	மபத	பதநி
மபத	ம த	பதநி	நிதப
ச்நித	ச் த	நிதப	தபம
நிதப	நி ப	தபம	பமக
தபம	த ம	பமக	மகரி
பமக	ப க	மகரி	கரிச

3. மிச்ர த்ருவதாளம் - 4 விபாகங்கள், 23 அங்கங்கள்.

±234567	= ‖	±234567	±234567
சரிகமபதப	ம க	சரிகமபமக	சரிகமபதநி
ரிகமபதநித	ப ம	ரிகமபதபம	ரிகமபதநிச்
ச்நிதபமகம	ப த	ச்நிதபமபத	ச்நிதபமகரி
நிதபமகரிக	ம ப	நிதபமகமப	நிதபமகரிச

4. கண்ட த்ருவதாளம் - விபாகங்கள், 17 அங்கங்கள்.

±2345	= ‖	±2345	±2345
சரிகமப	ம க	சரிகமக	சரிகமப
ரிகமபத	ப ம	ரிகமபம	ரிகமபத
கமபதநி	த ப	கமபதப	கமபதநி
மபதநிச்	நி த	மபதநித	மபதநிச்
ச்.நிதபம	ப த	ச்நிதபத	சநிதபம
நிதபமக	ம ப	நிதபமப	நிதபமக
தபமகரி	க ம	தபமகம	தபமகரி
பமகரிச	ரி க	பமகரிக	பமகரிச

5. சங்கீரண த்ருவதாளம் - 4 விபாகங்கள், 29 அங்கங்கள்.

±23456789	= ‖	±23456789	±23456789
சா ரீ காமபத	ப ம	சா ரீ காமபம	சா ரீ காமபத
ரீ காமாபதநி	த ப	ரீ காமாபதப	ரீ காமாபதநி
காமாபாதநிச்	நி த	காமாபாதநித	காமாபாதநிச்
ச்ா நீ தாபமக	ம ப	ச்ா நீ தாபமப	ச்ா நீ தாபமக
நீ தாபாமகரி	க ம	நீ தாபாமகம	நீ தாபாமகரி
தாபாமாகரிச	ரி க	தாபாமாகரிக	தாபாமாகரிச

விஷயம் - 2. மட்டியதாளம்.

1. சதுர்ச மட்டியதாளம் - 3 விபாகங்கள், 10 அங்கங்கள்.

±234	= ‖	±234	±234	= ‖	±234
சரிகரி கமபம பதநித நிதபத பமகம	சரி கம பத நித பம	சரிகம கமபத பதநிச் நிதபம பமகரி	ரிகமக மபதப ச்நிதநி தபமப மகரிக	ரிக மப ச்நி தப மக	ரிகமப மபதநி ச்நிதப தபமக மகரிச

2. திச்ர மட்டியதாளம் - 3 விபாகங்கள், 8 அங்கங்கள்.

±23	= ‖	±23	±23	= ‖	±23
சரிக கமப ச்நித தபம	சரி கம ச்நி தப	கமப பதநி தபம மகரி	ரிசம மபத நிதப பமக	ரிக மப நித பம	மபத தநிச் பமக கரிச

3. மிச்ர மட்டியதாளம் - 3 விபாகங்கள், 16 அங்கங்கள்.

± 234567	= ‖	± 234567
